# சதிவழக்கு எதிரிகள் கண்தானம் செய்ய முடிவு

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (18-9-66) இதழ் 219
பராபவ புரட்டாதி 2 ஜமாதுல்ஆகிர் 2 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

## பண்டாரநாயகா நினைவுதின கொடை

கொழும்பு, சனி

சதிவழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள 28 எதிரிகளும் தமது கண்களைக் கண் வங்கிக்கு அர்ப்பணித்துள்ளனர்.

இன்று சதிவழக்கு விசாரணை ஆரம்பத்தில், நான்காவது எதிரியின் வழக்கறிஞரான திஸ்ஸ விஜயரத்ன, கண் அர்ப்பணிப்புக்கு எதிரிகளனைவரது பெயர்களையும் பதிவுசெய்ய பிஸ்கால் அதிகாரியிடம் உத்தரவிடும்படி நீதவானை வேண்டிக் கொண்டார்.

செப்டம்பர் 26-ம் திகதி வரும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினத்தை யொட்டியே இக்கண்கள் தன் கொடை செய்யப்பட்டுள்ளது.

முதன் முதலில் கண் தன் கொடை அளித்தவர் சேர். ஒலிவர் குணத்திலக்கா என்று திரு. திஸ்ஸ விஜயரத்தின கூறினர்.

# சிங்களச் சட்டம் செயலற்றுவிடும்

## திறைசேரி சுற்றறிக்கைக்கு எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு

### நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடிவு

கொழும்பு, சனி

நிர்வாக மொழி சம்பந்தமாக அரசாங்க ஊழியரின் சேவை நிபந்தனைகள், விதிகள் பற்றிய திறைசேரி சுற்றறிக்கைகளைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கெதிராக இன்று பார்லிமெண்டில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக்கொண்டுவர எதிர்க்கட்சியினர் முடிவுசெய்துள்ளனர்.

உத்தியோக மொழியான சிங்களம் நிர்வாக மொழியாகப்பாவிக்கப்படுவதை அரசாங்கஊழியருக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் செயலற்றதாக்கிவிடுமென்ற அடிப்படையிலேயே எதிர்க்கட்சியினர் இத்தீர்மானத்தைக் கொண்டுவருகின்றனர்.

சேவைக்கு எடுக்கப்பட்ட காலத்தில் எந்த மொழியில் எடுக்கப்பட்டார்களோ அந்த மொழியில் அதாவது ஆங்கிலத்தில் பழைய சேவையாளர் தொழிலாற்ற அனுமதிக்கப்படும் சலுகையானது, நாடுமுழுவதும் சிங்களத்தைஉத்தியோகமொழியாக அமுல் நடத்தும் திட்டத்தைச் சீர்குலைத்துவிடுமென இவர்கள் கருதுகிறார்கள்.

புதிய சேவையாளருக்குச் சிங்களத்தில் தேர்ச்சி பெற மூன்று வருடகால அவகாசம் அளிக்கப்பட்டுள்ள சலுகையையும், அந்த அளவுக்கு நிர்வாக வேலைகள் தாமதப்பட்டுவிடுமென்ற காரணத்தைக்கொண்டு இத்தீர்மானம் எதிர்க்கிறது.

இதற்கிடையில், புதிய திறைசேரி சுற்றறிக்கைகள் மூலம் தமக்கு எதுவித சலுகைகளும் கிடைக்கவில்லையென்றும், நிலைமையை அவை மேலும் மோசமாக்கியுள்ளனவென்றும் கூறும் தமிழ் எழுதுவினைஞர் சங்கம், தமிழ் ஊழியர்சங்கம், ஆகிய சங்கங்கள் திறைசேரிச் சுற்றறிக்கைகளை எதிர்த்து நடவடிக்கை எடுக்க விரைவில் கூடும் திறைசேரியின் சுற்றறிக்கைகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்பது இவர்கள் கோரிக்கையாகும்.

## 'ஜே. ஆர். மீது வழக்கு தொடருங்கள்'

### எதிரிதரப்பு வழக்கறிஞருக்கு முடிக்குரிய வழக்கறிஞர் யோசனை

கொழும்பு. சனி

இன்று சதிவழக்கு விசாரணை ஆரம்பமாகுமுன், ராஜாங்க மந்திரிக்கெதிராக இக்கோர்ட்டில் ஒருபக்கக் குற்றச்சாட்டுகளைச் செய்வதைவிட, அவருக்கெதிராகத் திரு. திஸ்ஸ விஜயரத்தின வழக்குத் தாக்கல்செய்து கொள்ளலாமென்று முடிக்குரிய வழக்கறிஞர் திரு. வேக்கி போல் கூறினர்.

திரு. விஜயரத்னவிடம் சாட்சிகள் யாராவது இருப்பின் எதிர்த்தரப்பினர் அச்சாட்சிகளைக் குறுக்கு விசாரணைசெய்ய அவர் அனுமதிக்கவேண்டும். அவருக்குப் போதிய சாட்சியமிருந்தால் அவர் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தலாம்.

மற்றைய வழக்கில்கொலை செய்திருப்பதற்கான சந்தேகம் நியாயமான அளவுஇருப்பதாகவும்ஆனால் கொலையை ருசுப்படுத்த சாட்சிகள் குறுக்கு விசாரணைசெய்யப்படவேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திரு. வேக்கி போல் கூறினர்.

இதற்குத் திரு. திஸ்ஸ விஜயரத்னபதிலளிக்கையில் தாம் கோர்ட்டுக்குத் தற்போதுசெல்ல விரும்பவில்லை என்றும், பார்லிமெண்டைத் தமது மேடையாகப் பாவிப்பாரென்றும் தெரிவித்தார்.

## யாழ். நகரமண்டபம் நவீன முறையில் புதுப்பிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகரமண்டபத்தை நவீன முறையில் அமைத்து பலவகையான குறிப்பிட்ட மாற்றங்களுடன் அமைக்கவிசேட ஆணையாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதற்காக ரூபா 7,800 ஒதுக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

புதிய அமைப்பின் பயனாக இதுவரை காலமும் இருந்து வந்த பல குறைபாடுகளை தற்போது மேற்கொள்ளப்பட்ட திட்ட அமைப்பு நிவர்த்தி செய்யுமெனத் தெரியவருகிறது.

தற்போதைய மண்டபத்தில் நாடகங்கள் இசை நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது பல குறைபாடுகளிலிருப்பதாக பல கலைஞர்களும் யாழ் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகராவும் மாநகரசபையின் விசேட ஆணையாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## போலாந்து-ஈரான் ஒப்பந்தம்

வாரர்சா, செப். 17

போலாந்தும் ஈரானும் ஓர்கலாச்சார ஒப்பந்தத்தை இங்கு நேற்றுக்கைச்சாத்திட்டனர்.

ஈரானின் ஷா, போலந்தில் தமது ஆறுநாள் சுற்றுப் பிரயாணத்தில் நேற்றுத் தமது இரண்டாவதுநாளைப் போலாந்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதில் ஈடுபட்டார்.

(ராய்டர்) ஏபி

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி

## சத்தியாக்கிரகம் இன்று பிரகடனம் செய்வர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேநீர்க்கடை வாசல்களில் மட்டுமன்றி கோவில் வாசல்களிலும், மறியல் போராட்டம் நடத்தவேண்டுமென சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணியில் சிலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

கோவில் வாசல்களில் சத்தியாக்கிரகம் செய்யும் திட்டத்திற்கு ஐக்கிய முன்னணிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பு இருப்பதாகவும், தெரியவருகிறது.

சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணியில் போராட்டத்திட்டங்கள் இன்றுகாலை அச்சுவேலியில் நடைபெறும் கூட்டத்தில் வெளியிடப்படும். இக்கூட்டத்தில் தமிழ்த்தலைவர்களையும், அரசாங்க ஊழியர்களையும் கலந்துகொள்ளும்படி சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணிகேட்டிருக்கிறது.

போராட்டத் திட்டங்களில், கள்ளு சீவுதல், ஓலை வெட்டுதல், தேங்காய்பறித்தல், கூலிவேலைசெய்தல் ஆகியவற்றை பகிஷ்கரித்து இயக்கம் நடத்துவதும், ஒன்றாக இருக்குமென்றும், இந்த இயக்கம், மறியல் போராட்டத்தை தொடர்ந்து நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

இன்றுகாலை போராட்டத் திட்டங்களை வெளியிடுமுன்னர், நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்று சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணித் தொண்டர்கள் வழிபாடு செய்வார்கள்.

தொகுதி வாரியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தொண்டர்கள் குழுக்களாகச்சென்றுதேநீர்க்கடைக்கு உள்ளேயும் சத்தியாக்கிரகம் செய்வார்கள் என அறியப்படுகிறது.

சிறுபான்மைத் தமிழரின் சத்தியாக்கிரக போராட்டம், முதலில் மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்படுமென்றும் அதன்பின் உடுப்பிட்டிக்கு விஸ்தரிக்கப்படுமென்றும், முன்னணியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். சத்தியாக்கிரக போராட்ட நிதி ஒன்றும் இன்று நடைபெறும் கூட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனப் பிடவைகள்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன அதிகாரிகள் தங்கள் பிடவைகள் விற்பனைசெய்வதற்கு எம்மைப் பிரதான விநியோகஸ்தர்களாக நியமனம் செய்துள்ளார்களென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவப்படுத்துகின்றோம்.

மேற்படி ஸ்தாபனத்தால் நிர்ணயிக்கப்பட்ட சில்லறை விலைக்கு அமைய வியாபாரம் செய்ய விரும்பும் யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள பிடவை வியாபாரிகள் தமக்குத் தேவையான பிடவைகளை மொத்த விலைக்குப் பெற்றுக்கொள்வதற்கு தாமதமின்றி எங்களுடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காலி கவனிக்கப்படவில்லை; ஆனால் வடக்கில் வேலைகள் ஜரூர்'

## அனில் முனசிங்காவின் கவலை

காலி, சனி

'கூட்டரசாங்கம் அரசாங்க அதிகாரிகளினால் நடாத்தப்படவில்லை. ஆனால் தேசிய அரசாங்கம் எல்லாவற்றையும் அவர்கள் விருப்பப்படியே செய்துவருகிறார்கள். நாங்கள் ஆட்சியிழந்த தோற்றபின் பல பாடங்களைக் கற்றுக் கொண்டோம்' என்று அவ்வத்தை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அனில் முனசிங்கா காலி நகரமண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய துறைமுகத் தொழிலாளர்சங்கக் கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

திரு. பி. ஜி. பியசேன கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. முனசிங்கா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: கூட்டரசாங்க மந்திரிகளின் வீடுகள்பற்றி சில பத்திரிகைகள் கண்டனம் செய்தன. ஆனால் தற்பொழுது உள்நாட்டு மந்திரி திரு. தஹநாயக்கா காலி துறைமுகம் அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்துவதில்லை. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திவேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. இவரைத் தோற்கடிக்க மக்கள் தயாராக வேண்டும்.

---

## தீவுப்பகுதியில் 'வயிற்றோட்டம்'

ஊர்காவற்றுறை, சனி

குழந்தைகளைப் பீடித்துக்கொண்ட 'வயிற்றோட்டம்' என்னும் வியாதி இப்போது தீவுப்பகுதியிலும் அதிகரித்துள்ளது. இதனால் பெற்றோர்கள் கவலையடைந்துள்ளனர்.

நாரந்தனை, வேலணை, சரவணை, சரம்பொன் ஆகிய இடங்களில் இந்நோய் அதிகரித்துவருவதாக அறியப்படுகிறது.

---

## ஜப்பான் தொழில் தூதுகோஷ்டி

டோக்கியோ, செப். 17

இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, மலேஷியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தென்வியட்நாம் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய, 20 லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட ஜப்பான் தொழில் சம்மேளனத்திலிருந்து 6 பேர் அடங்கிய தூதுகோஷ்டியொன்று இங்கிருந்து விமானமூலம் பிரயாணமாகியது. (பி. டி. ஸி.)

---


**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30—9-30
கிஷோர்குமார் நடித்த
Mr. "X" in Bombay
குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் படம்

**REGAL—JAFFNA**
NOW SHOWING
ELVIS PRESLEY
MARRY ANN MOBLEY
in
HARÈM HOLIDAY
(M. G. M' Color)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
**தெய்வத்தாய்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பீ. வி. சரோஜா நடித்த
**கொடுத்துவைத்தவள்**


# "கலைஞர்களை மக்களே கௌரவிக்கவேண்டும்"

## சாகித்தியதினவிழாவில் உடுவில் எம். பி.

மாவிட்டபுரம், சனி

தமிழ்மன்னர்கள் கலைஞர்களை, கவிஞர்களை அந்த நாளில் கௌரவித்தார்கள். இந்தநாளில் மக்கள் மன்றங்களே இதனைச்செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் உடுவில் சாகித்திய விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுவில் கிராம சபையின் சாகித்திய விழா கிராம சபை மண்டபத்தில் நடைபெற்றது. விழா ஆரம்பத்தில் கிராம சபையின் புதிய நூல் நிலையத்தை வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் திறந்துவைத்தார். வலி-வடக்குகாரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை சாகித்திய விழா கொடியை ஏற்றிவைத்ததுடன் கிராம சபையின் முன்னாள் தலைவர்களின் உருவப்படங்களைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

இலக்கியத்தை ஒருசாரார் மட்டும் வளர்க்கமுடியாது. எல்லோரும் சேர்ந்துதான் இலக்கியத்தை வளர்க்க வேண்டும். அரசர்கள் பணியை மக்கள் ஸ்தாபனங்களே பொறுப்புடன் செய்யவேண்டும்.

வலி-வடக்குக் காரியாதிகாரி திரு டி. முருகேசபிள்ளை பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சிங்கள-பௌத்த மக்கள் கலாச்சார சமயத்துறையில் தங்களுடைய நன்மைக்காகச் செய்யும் தொண்டுகள் சைவ மக்களுக்குப் பலனளித்து வருகின்றன. இது வரவேற்கத்தக்கது.

உண்மையாக சாகித்திய விழாவில் விநாயகர் வழிபாடு விசேஷ இடம்பெற வேண்டும். எந்தப் புராணத்தை எடுத்துப்பார்த்தாலும் ஆனைமுகத்தவனுக்கு வணக்கம் செலுத்தித்தான் மற்ற எந்த வணக்கங்களும் சொல்லப்படுகின்றன.

அகில இலங்கையிலேயும் சாகித்தியவிழாகொண்டாடுவது இலக்கிய மறுமலர்ச்சிக்கு மட்டுமல்ல சமய அபிவிருத்திக்கும் ஓர் சிறந்த அடிப்படையாக அமையும் என்று அவர் கூறினார்.

திரு புதுமைலோலன் பேசுகையில், ஈழத்திலேயே இலக்கியக்கலை வளரவேண்டுமானால் இந்தியாவிலிருந்து வாரம்தோறும் இறக்குமதி செய்யப்படும் தரக்குறைவான நூல்கள் தடைசெய்யப்படவேண்டும் என்றார்.

இரசிகமணி கனக. செந்திநாதன் பேசியதாவது: பிரசுரிக்கும் நூல்களை அரசாங்கம் வாங்கி நாட்டில் உள்ள நூல்நிலையங்களுக்கும், வாசிகசாலைகளுக்கும் வழங்க வேண்டும். இதனால் ஈழத்து எழுத்தாளருக்கு உற்சாகம் பிறக்கும். எழுத்தாளரின் பிரசுரிப்புச் செலவையும் அவர்களே பொறுப்பேற்க வேண்டும்'

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் பேசும் போது மாவட்ட சபைகள் வந்ததும் கலாச்சாரம், கல்வி, சுகாதாரம் முதலிய கடமைகளை மாவட்ட சபைகளே கவனிக்கும் என்றும் அதன்மூலம் மக்கள் விருப்பத்துக்கு ஏற்ப நிர்வாகம் நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் பேசுகையில் இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் எல்லா நூல்களையும் தடைசெய்வது நல்லதல்ல. என்று கூறினார்.

---

## 'வறுமையை ஒழிப்போம்'

பம்பாய், செப். 17

'கடந்த 3 ஐந்தாண்டுத்திட்டங்களினால் அனுகூலமடைந்தவர்களின் வருவாயைப் பயன்படுத்தி கோடானுகோடி ஏழைகளின் வறுமையைப் போக்குவதே நமது லட்சியம்' என்று இந்திய [illegible] தார்.

---

## தேடுதல் முயற்சி கைவிடப்பட்டது

மேற்கு ஜெர்மன், செப். 17

வடகடிலில்மூழ்கியமேற்கு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல் விபத்தில் தப்பியவர்களை வடகடலுக்கு மேல் விமானதேடுதல்மூலம்கண்டு பிடிக்கும் முயற்சியைமேற்கு ஜெர்மன் கடற்படை கைவிட்டுள்ளது.

இவ்விபத்தில் கப்பலில் அகப்பட்டவர்களில் யாராவது உயிருடன் தப்பியிருப்பார்களென்பது அசாத்தியம் என்று இங்கு கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் கூறினர்.

கடந் புதன்கிழமை மூழ்கிய யந்நீர்மூழ்கிக் கப்பலில் 21 பேர் இருந்தனர். அவர்களில் ஒரேயொருவர் மட்டும் காப்பற்றப்பட்டார். இதுவரை ஆறு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (பி. டி. ஸி.)

---

## மொழி இலாகா அதிபர் கவலை

கொழும்பு, சனி

உத்தியோக மொழி இலாகாவில் போதிய உத்தியோகத்தர் இல்லாமை அதிக சிங்கள, தமிழ் பாடப்புத்தகங்களை வெளியிடுவதற்குத் தடையாக உள்ளது.

இவ்வாறு இமது 1964—65 நிர்வாக அறிக்கையில், உத்தியோக மொழி இலகாக் கொமிஷனர் திரு. நந்தி தேவா விஜயாசகரா குறிப்பிட்டுள்ளார்.

இக்குறைபாடு இருந்த போதும், அவ்வருடத்தில் 66 சிங்கள, தமிழ் பாடப்புத்தகங்கள் வெளியிடப்பட்டிருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---


**வரி விளம்பரம்**

**வைத்தியம்**

நொய்வு, காசம், நீரிழிவு, சிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## டாக்டர் இல்லை

ஊர்காவற்றுறை சனி.

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த ஏழு மாதங்களாக டி. எம். ஓ டாக்டர் இல்லை. முன்கடமையாற்றிய டாக்டர் தனிப்பட்ட ஒரு ஆஸ்பத்திரிக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டார் இவரது இடம் ஆஸ்பத்திரியில் இன்னமும் காலியாகவே இருக்கின்றது. இதனால் நோயாளருக்கு பெரிதும் கஷ்டமேற்பட்டுள்ளது.

---

## 'மனதுக்கு அமைதி தருவது சமயம்'

—உடுப்பிட்டி எம். பி.

காலி, சனி

''மனதுக்கு அமைதி தருவதற்குரிய ஒரேஒரு சாதனம் சமயமே. தமிழ் வாலிபர்களிடையே சமயப்பற்றுக் குன்றிவரும் இந்நேரத்தில் காலியூரிலுள்ள தமிழ் வாலிபர்கள் இந்து இளைஞர் சங்கம் ஒன்றை அமைத்துசமய வளர்ச்சியிலும், சமூக வளர்ச்சியிலும்பெரிய பங்கெடுத்து வருவதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்'' என உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், கொழும்பு இந்துவாலிபர் சங்கத் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் காலி இந்து இளைஞர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பாரதி விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

விழாவில் மதிரும் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன். திருவாளர்கள் அப்துல் மஜீத், அருள் வர்குணசிங்கம், நாவல்லிபுரம் ஆகியோர்சொற்பொழிவாற்றினர்.


**மகத்தான இரண்டாவது வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) | வெலிங்டன் (கம்பளை)



சிவாஜி - எஸ்.எஸ்.ஆர்.
பாலையா, ராதா,
முத்துராமன், ஸ்ரீராம்,
நாகேஷ்,
தேவிகா, புஷ்பலதா
மற்றும் பலர்நடிக்கும்
பாரத மாதா பிக்சர்ஸ்

**பழநி**

இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
திரைக்கதை-டைரக்ஷன்: பீம்சிங்

**இன்றைய பத்தி உலகில் சிறந்து விளங்குவது**

**லீலா ஜவ்வாது பத்திகளே!**

இல்லங்கள் - தேவாலயங்கள்
மற்றும்
எல்லா வைபவங்களுக்கும்
உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!
எங்கும் கிடைக்கும்

ஏகவிநியோகஸ்தர்கள்:

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போர் ஒன்று ஏற்பட்டால் பொதுத்தேர்தல் நிறுத்தப்படும்!

## செய்தி நிருபர்கள் மகாநாட்டில் பிரதமர் இந்திரா

புதுடில்லி, செப். 17

'போர் ஒன்றுஏற்பட்டால் அடுத்த வருடம் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தல் நிறுத்திவைக்கப்படும்' என்று பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி இங்கு செய்தி நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் சொன்னார்.

அலகபாத்திலுள்ள சுவராஜ் பவனத்தில் இம்மகாநாடு நடந்தது. ஸ்ரீமதி இந்திரா காந்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:

எல்லையில் பதற்ற நிலையைத்தவிர்ப்பதற்கு இந்திய-பாகிஸ்தான் ராணுவத் தலைவர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை இரு நாடுகளிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

### ஆதரவு பெருகுகிறது!

பாரதத்தின் கருத்துக்களுக்குபல நாடுகளின் ஆதரவு இப்போது முன்னையைவிட பெருகிக்கொண்டுவருகிறது. வியட்னாமில் போரை நிறுத்த வேண்டுமென்ற பாரதத்தின் கொள்கையை பலநாடுகள் மனப்பூர்வமாக வரவேற்கின்றன.

இந்திய-சீன உறவுகளில் மாற்றம் ஏற்படுமென்பது இனி நினைக்கவேமுடியாது. இப்போது இருப்பதுபோல்தான் இருக்கும்.

அடுத்த வருடத்தில் நடைபெறவிருக்கும் இந்தியப் பொதுத்தேர்தல் போர் ஒன்று துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டால் நிறுத்திவைக்கப்படவேண்டிவரும்.

ஸ்ரீமதி இந்திரா பேசுகையில் ஒரு கருத்தை வலியுறுத்திப் பேசினார். ''யாராவது வலியவந்து தாக்கினால் நாம் அதனைப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்'' என்றார்.

# கருணாநிதி வழக்கு

சென்னை, செப். 17

தி. மு. கழக தேர்தல் நிதியை எடுத்து சினிமாப் படம் தயாரிக்கப் பயன்படுத்தியதாக 'நாத்திகம்' என்ற பத்திரிகையில் தன்னைப்பற்றி அவதூறான கட்டுரை வெளியிட்டதாக அதன் ஆசிரியர்மீது கருணாநிதியினால்



தொடரப்பட்டிருந்த வழக்கு சென்னை பிரதமமாகாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

'மறக்கமுடியுமா?' என்ற படத்தை எடுப்பதற்கு தேர்தல் நிதியைத் தான் பயன்படுத்தவில்லை என்று வழக்கறிஞர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. மு. கருணாநிதி சொன்னார்.

தி. மு. க. வரவு-செலவுக்கணக்கு கருணாநிதியின் 'முரசொலி' பத்திரிகையின் கணக்கு வழக்கு, ஆகியவற்றைக் கோர்ட்டில் சமர்ப்பிக்கும்படி கோர்ட்டில்கேட்டுக்கொள்ளப்பட்டது. விசாரணை இம்மாதம் 23-ம் திகதிக்குஒத்திவைக்கப்பட்டது.

# தனது பிராந்தியத்தில் அமெரிக்க தாக்குதலாம்!

## சீனாவின் குற்றச்சாட்டு

ஹாங்காங், செப். 17

சீன வானப்பிராந்தியத்தில் அமெரிக்க ஜெட்விமானங்கள் இருமுறை தாக்குதல் நடத்தியதாகச் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத் தாக்குதலினால் கிராமங்கள் நாசப்படுத்தப்பட்டதாகவும், பலர் அபாயகரமான விபத்தில் காயங்களுக்குள்ளாகியிருப்பதாகவும் நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இருமுறைத் தாக்குதலின்போதும் அமெரிக்க விமானங்கள் முக்கியமான கிராமங்களின்மீது குண்டுகளைப் போட்டதாகவும் அறிவிக்கப்பட்டது,

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன்ரஸ்க், சீனாவின் இந்தக் குற்றச்சாட்டு ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# பூனையின் மரணத்துக்கு டாக்டர் மீது வழக்கு

அதென்ஸ், செப். 17

தனது இறந்த பூனையின் மரணத்துக்காகப் பழிவாங்க எண்ணியுள்ள கிரேக்கப்பெண்மணி ஒருவரின் முயற்சி இளம் மிருக வைத்தியரின் வெற்றிகரமான தொழிலையே பாதிப்பதாக இருக்கிறது.

கவலையீனம் காரணமாகத் தனது 14 வயதுப் பூனையின் மரணத்தை விளைவித்ததாக 65 வயதான திருமதி அதீனவினி என்னும் வயோதிப மாது, 34 வயதான டாக்டர் ஹிப்போக் கிரிட்டில் சவோராசைக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்துள்ளார். (பி. டி. ஐ.)

# பாரதத்தை பொறுத்தவரை காமன்வெல்த் பெரும் வெற்றி!

## இந்திய வெளியுறவு மந்திரி திரு. சுவர்ணசிங் பெருமிதம்

லண்டன், செப். 17

"பாரதத்தைப் பொறுத்தவரையில் காமன்வெல்த் மகாநாடு பெரும் வெற்றியளித்திருக்கிறது" என்று இந்திய வெளியுறவு மந்திரி திரு. சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார்.

லண்டன், செப். 17

லண்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்பாக மந்திரி சுவர்ண்சிங் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார். ரொடீஷியப் பிரச்னை கடுமையான ஒரு பிரச்னையாக மகாநாட்டில் காரசாரமாக விவாதிக்கப்பட்டபோதிலும், பத்து நாள் நடந்த இந்த மகாநாட்டால் காமன்வெல்த் வலுப்பெற்றுள்ளது'' என்றும் அவர் சொன்னார்.

### பாரதத்துக்கு வரவேற்பு

வடவியட்னாம்மீது குண்டு வீசுவதை நிபந்தனையின்றி நிறுத்திவைக்க வேண்டுமென்று பாரதத்தின் கருத்துக்கு அங்கத்துவ நாடுகள் பெரிதும் வரவேற்புத் தந்தன என்றும் மந்திரி கூறினார்.

பாகிஸ்தான் வெளியுறவு மந்திரியுடன் விருந்தொன்றில் கலந்துகொண்டதால் ஏற்பட்ட விளைவுகள் என்னவென்று கேட்டதற்கு மந்திரி பதிலளிக்கையில் பேசிப் புரிந்துகொள்வதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக இருந்ததே தவிர, பிரச்னைகள் பற்றி விவாதித்து விளைவுகளை எதிர்பார்க்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை என்றார்.

# லண்டனில் வீதி விஸ்தரிப்பு

## இலங்கையும் கலந்து கொள்ளும்

லண்டன், செப் 17

இம்மாதம் 18ம் திகதியிலிருந்து 25ம் திகதிவரை லண்டனில் வீதி விஸ்தரிப்பு மாநாடொன்று நடைபெறும். இலங்கை உட்பட 90 நாடுகளிலிருந்து 2000 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

இத்தகைய பிரம்மாண்டமான அளவில் வீதி விஸ்தரிப்பு மாநாடுநடைபெறுவது இதுவே முதற்தடவையாகும்.

வீதிகளை விஸ்தரிப்பதுபற்றி இம்மகாநாட்டில் ஆராயப்படுவதுடன் வீதி விஸ்தரிப்பு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய கருத்துக்களும் அங்கத்துவநாடுகளிடையே பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளப்படும்.

மாநாட்டு பிரதிநிதிகள் இங்கிலாந்திலுள்ள பெரிய வீதி விஸ்தரிப்புத் திட்டங்கள் நடைமுறையில் இயங்குவதை நேரில் சென்று பார்வையிடுவர்.

# இளைஞர்களுக்கு மாதர் வழிகாட்டவேண்டும்

புதுடில்லி, செப். 17

நாட்டில் சமாதானம் நிலவுவதற்கும் ஒழுங்கு நிறுவப்படுதற்கும் மாதர்கள் முன்னின்று உழைக்க வேண்டுமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இங்கு கூறியுள்ளார்.

மாணவர்களின் கிளர்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில் இளைஞர்களுக்குத் தக்க ஆலோசனை கூறி அவர்களைச் சரியான பாதையில்நடத்திச் செல்ல வேண்டியமகத்தான பொறுப்பு மாதர்களைச் சார்ந்ததாகுமென்று அவர் கூறினார்

விலைவாசிகள் உயர்வைப் பற்றிப்பேசுகையில், மாதச் சம்பளம் பெறுவோர்பொருட்கள் வாங்குவதில்ஏற்படும் செலவைச் சமாளிப்பதில் படும் கஷ்டத்தையிட்டுத் தாம் பரிவு கொள்வதாகக் கூறிய திருமதி இந்திரா இதற்குப் பொறுப்பானவர் கள்பணம்படைத்தவர்களே யென்றும், இவர்கள் சினிமா கேளிக்கைகள் போன்ற ஆடம்பரச் செலவுகளில் அதிகமாக ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டார்.

# ஆசியாவுக்கு அவுஸ்திரேலிய பொம்மலாட்ட கோஷ்டி

கான்பெரா, செப். 17

அவுஸ்திரேலியாவின் பிரபல பொம்மலாட்டக்கோஷ்டியினரான 'டின்டுக்கீஸ்' 14 ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளது டேப்பில் பதிவுசெய்யப்பட்டசங்கீதத்துடன்தான் இவர்கள் தமது பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடாத்துவார்கள். ஆசிய நாடுகளில் அந்தந்த நாடுகளிலுள்ள மொழிகளிலேயே நாடக சம்பாஷணைகள் பதிவுசெய்யப்படும் (பி.டி.ஐ.)

# பிரதமர் வில்சனுக்கு மக்காரியஸ் பாராட்டு

லண்டன், செப், 17

சாம்ராஜ்ய நாடுகளின் பிரதமர்கள் மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் ரொடீஷியப் பிரச்னையை நல்லமுறையிலும், நேர்மையான முறையிலும் அணுகியிருக்கிறார் என்று இங்கு சைப்ரஸ் ஜனாதிபதி அதிவணக்க மக்காரியஸ் தெரிவித்தார். (பி. டி. ஐ.)

# இந்தியா மீது சீனா சீற்றம்

ஹொங்கொங், செப். 17

'இரண்டு சீனர்கள்' என்ற அமெரிக்க ஏகாதிபத்தியத் தலைவர்களின் சதிக்கான சேவையில் சியாங்-காய்-செக்கின் கோஷ்டியினருடன் உள்ள தமது தொடர்பை ஊர்ஜிதப்படுத்த இந்திய அரசாங்கம் தாய்வானுக்குப் பாராளுமன்றக் குழுவொன்றினை அனுப்பியுள்ளதாக ஹொங்கொங் செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது. (பி. டி. ஐ.)

# 'காமராஜர் கருத்துப்படி தேர்தல் எதற்கு?'

## அண்ணாதுரை கேட்கிறார்

சென்னை, செப். 17

''ஆட்சிக்கு வருவதற்கு தி. மு. கழகத்துக்கோ, எதிர்க்கட்சிகளுக்கோ யோக்கியதை இல்லை என்று காமராஜர் சொல்கிறார். அவர் கருத்துப்படி எந்தக்கட்சிக்கும் ஆள யோக்கியதை இல்லையென்றால், காங்கிரஸே எப்போதும் ஆளவேண்டுமென்றால், ஏன் தேர்தல்? அதற்கு ஏன் 8கோடி ரூபாய் கொட்டி அழவேண்டும்?'' என்று தி. மு கழகத்தலைவர் திரு சி. என். அண்ணாதுரை இங்கு நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கேட்டார்.



சென்னை, சூளை என்ற இடத்தில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:-

### சென்னைமக்கள் விபரம்தெரிந்தவர்கள்

சென்னை நகரைப்பொறுத்தவரை காங்கிரஸ் கட்சியை எப்படித் தோற்கடிக்க வேண்டுமென்பதுதான்கேள்வியேஅல்லாமல், ஏன்தோற்கடிக்கவேண்டுமென்பது அல்ல.

ஏனெனில். சென்னைநகர மக்கள் அரசியலில் விபரம் தெரிந்தவர்கள் காங்கிரஸ் ஆட்சியின் அநியாயத்தை இவ்வளவு காலத்திலும் அவர்கள் உணர்ந்துவிட்டார்கள். ஆகவே காங்கிரஸ் கட்சியை எப்படி ஆட்சியிலிருந்து அகற்றுவது என்பதைத்தான் நாம் ஆராய வேண்டும்.

### காங்கிரஸ் ஒரு புளியங்கட்டை

ஆட்சியை மாற்றுவது அவ்வளவு சுலபமல்ல. பிறகு பிளக்கும்போது சவுக்கு மரம் உடனேபிளந்துவிடும். புளியங்கட்டை என்றால் கோடரியை அந்தப்பக்கம் வீசினால் இந்தப்பக்கம் பாயும். அதுபோல் ஆட்சியில் அந்தப்பக்கம் கோடரி போட்டால் அகற்ற முடியும் என்று தெரிந்து கொண்டு போடவேண்டும். மக்களாகப் பார்த்து எங்களை ஆட்சியில் வைத்தால் இருக்கிறோம். இல்லாவிட்டால் இன்னும் 5 ஆண்டுகள் பொறுக்கநான்தயார். நான் எப்போதும் அவசரம் இல்லாதவன். பிறக்கும் போது கூட அவசரம் இல்லாமல் 34 நாள் இடுப்புவலிக்குப் பிறகு பிறந்தவன் நான். அதனால் எனக்கு அவசரமில்லை. ஆனால் நீங்கள் பொறுக்கமாட்டீர்கள்!

# பிரிட்டிஷ் மந்திரிசபை விசேஷ கூட்டம்

லண்டன், செப். 17

அண்மையில் நடந்து முடிவுற்ற 22 சாம்ராஜ்ய நாடுகள் மாநாட்டைத் தொடர்ந்து, ரொடீஷிய சுதந்திரப் பிரச்னையை ஆராயும் பொருட்டு விசேஷ மந்திரி சபைக்கூட்டமொன்றுக்கு மேற்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் தலைமை வகித்தார்.

மகாநாட்டின்போது, பிரிட்டனின் புதிய கொள்கையைப்பற்றி பிரிட்டனால் அங்கீகரிக்கப்பட்ட ரொடீஷிய கவர்னர் சேர் ஹம்பரி கிப்சுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்றிருந்த பிரிட்டிஷ் உயர் அதிகாரி ஒருவரின் அறிக்கையை மந்திரி சபை ஆராய்ந்து வருவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பி. டி. ஐ)

# உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்!

சைகோன், செப். 17

தென்வியட்னாம் பௌத்த மதத் தலைவர் திரு. குவாங் நேற்று தமது உண்ணாவிரதத்தை 100-வது தினத்தில் கைவிட்டார். தென்வியட்னாம் ஆட்சிக்கு எதிராக அவர் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தார்.

# கம்போடியா மறுத்தது

கம்போடியா, செப். 17

தாய்லாந்துடன் மீண்டும் தூதரகத் தொடர்புகளைத் தொடங்குவதற்குக் கம்போடியா சில நிபந்தனைகளை விதிக்கவில்லதாக தாய்லாந்து அறிவித்துள்ளதை கம்போடியா மறுத்தது. (பி. டி. ஐ.)

# இரத்த தானம்

இமையாணன், சனி

இன்று உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இரத்ததானம் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அநேகர் தங்களை கலைஞர் என்று சொல்லிக் கொள்ளுகின்றார்கள். ஆனாலும் அவர்களுடைய சிருஷ்டிகளுள் ஆத்மாவின் முற்போக்குத்துடிப்பும் பரபரப்பும் கொஞ்சம்கூட இல்லை. மனிதனின் அந்தரங்க ஆத்மா எவ்வளவு தூரம் வெளிப்பட்டிருக்கிறதோ அவ்வளவு தூரத்துக்குத்தான் புறத்தோற்றங்களுக்கு மதிப்புண்டு.

—மகாத்மாகாந்தி.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.

Telegrams : EELANADU Jaffna. Telephone : 539

[illegible] புரட்டாதி 2 (18-9-66)

## காமன்வெல்த் மகாநாடு

லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு 'சுபமாக' முடிவடைந்து மகாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

ரொடீஷியப் பிரச்னையில் காமன்வெல்த் பிளவுபடும் என்று பலரும் எதிர்பார்த்தனர். பிளவு ஏற்படாமலும் காமன்வெல்த் குடும்பத்தின் உறவுசீர்குலையாமலும் மகாநாடு சுபமாக முடிவடைந்தது. அந்த மகாநாட்டில் கலந்துகொண்டவர்களனைவரும் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய ஒரு சாதனைதான். இதில் இலங்கை நிச்சயம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதற்கு நியாயமுண்டு. ஏனெனில் இலங்கையின் சமரச யோசனை தான் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு முறிந்து போகாமல் தடுக்கக் காரணமாக இருந்ததாம்.

ரொடிஷியாவில், அந்நாட்டின் பெரும்பான்மையிரான ஆபிரிக்க மக்களுக்கு சுதந்திரம் வழங்காமல், அங்குள்ள சிறுபான்மையினரான வெள்ளையர், அயன்ஸ்மித் தலைமையில் ஒரு தலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் செய்து, சட்டவிரோதமாக அமைந்துள்ள ஆட்சியை பேச்சு வார்த்தைகள் மூலம் இவ்வருட முடிவுக்குள் அகற்றிவிட வேண்டுமென்றும் இல்லையேல் அந்த அரசாங்கத்துக்கு எதிரான தடை நடவடிக்கைகளை ஐ. நா. மூலம் மேற்கொள்ள வேண்டுமென்றும் பிரதமர் தீர்மானித்து இப்பொறுப்பை பிரிட்டிஷ் பிரதமர் வில்சனிடம் ஒப்படைத்துள்ளனர்.

பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னை தீருமா என்பது சந்தேகம். அதன்பின் ஐ. நா. மூலம் எடுக்கவிருக்கும் தடைநடவடிக்கைகளுக்கு பல நாடுகளும் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கலாம் எனினும் தென்னாபிரிக்காவின் ஆசியும் ஒத்துழைப்பும் ஆதரவும் ரொடீஷியாவின் அயன்ஸ்மித்துக்கு இருக்கிறது. தென்னாபிரிக்கா மீது விதிக்கப்பட்ட தடை நடவடிக்கைகள் கூட சரியான பயன்தரவில்லை.

பேச்சுவார்த்தையும் பொருளாதார தடை நடவடிக்கைகளும் பயனளிக்காமல் போகலாம். ஆனால் ஆபிரிக்க மக்களின் எழுச்சியை இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் தடுக்கமுடியும்?

## கலை அரங்கு வசதி

தமிழ்க் கலை, கலாசாரம் வளர வேண்டுமென்றும் அவற்றுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் பலரும் பேசுகின்றனர். ஆனால் தமிழ்மக்களின் தலைநகரமெனவும் இலங்கையின் இரண்டாவது பெரிய பட்டினமெனவும் பெருமையுடன் கூறிக்கொள்ளும் யாழ்ப்பாணத்தில் கலை நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் அளிக்கவும் அவற்றை மக்கள் வசதியாக இருந்து கண்டுகளிக்கவும் ஓர் அரங்கு யாழ்ப்பாணத்தில் இல்லை.

யாழ்ப்பாணம் நகர மண்டபமும், திறந்த வெளி அரங்கும்கூட கலைஞர்களின் தேவையையோ, மக்களின் வசதியையோ நிறைவேற்றக் கூடியனவாக இல்லை. இக்குறையை பல கலைஞர்களும் ரசிகப் பொதுமக்களும் பல தடவைகளிலும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். யாழ்ப்பாணப் பிரதேச கலாமன்றமும் இக்குறையை எடுத்துக்கூறி அதை நிவர்த்திக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தது.

அண்டை நாடான இந்தியாவிலும் மற்றும் பல நாடுகளிலும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வசதியான, விசாலமான அரங்குகள் அமைக்கப்பெற்றுள்ளன. இதனால் அந்த நாடுகளில் கலை, கலாசாரங்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன.

யாழ்ப்பாண நகரமண்டபத்தைத் திருத்தி அமைத்து கலை, கலாசார நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் நடைபெற வசதிசெய்ய மாநகர சபை நிர்வாகம் இப்போது முயற்சி மேற்கொண்டிருக்கிறது. இது பலருக்கும் மகிழ்ச்சியளிக்கும். கலைஞர்களினதும் சிற்பக்கலை நிபுணர்களினதும் ஆலோசனையைப் பெற்று இத்திருத்தத்தை மேற்கொள்வது நல்லது.

### பரீட்சைமுடிவு இன்னுமில்லை மாணவர் ஏமாற்றம்.

உடுவில், சனி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப்பாடசாலையின் கழக ஆண்டு 1965-66க்குரிய வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை முடிந்து பல மாதங்களாகியும் இன்னமும் வெளிவராததையிட்டு பரீட்சை எழுதிய மாணவர்கள் சிருந்த கவலை கொண்டுள்ளனர். மேற்படி பரீட்சை இவ்வருடம் மார்ச்-ஏப்ரல் மாதங்களில் நடைபெற்றது. பரீட்சை முடிவுற்று சுமார் ஆறு மாதகாலங்களாகியும் இன்னமும் பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை. தினமும் பரீட்சை எழுதிய மாணவர்கள் பாடசாலையை முற்றுகையிட்டு, முடிவுகள் வராதலைக் கண்டு மிகுந்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பியவண்ணம் இருக்கின்றனர்.

# ஐயாறன் எழுதுவது

செல்வி ஜெகதாம்பிகை பரமதாதனின் இசை அரங்கேற்றம் முந்தாநாள் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடந்தது. ஒரே ஒரு குறை. அவருக்கு நான்கு வருடங்கள கலை கற்பித்த மகாராஜபுரம் சந்தானம் வரமுடியாமல் போனதுதான்.

விசா எடுக்க முயற்சிசெய்ததாயும், ஆனால் அது கிடைக்க முடியாமல் போய்விட்டதாகவும் கூட்டத்தில் தெரிவித்தனர். விழாவுக்குத் தலைமைவகித்த அரசாங்க அதிபரைக் கேட்டேன். தம்மூலம் கேட்டிருந்தால் விசா பெற்றுத்தந்திருக்கலாமென்றார்.

பின்னர் விசாரித்ததில் விசா ஒரு மாதத்துக்கு வேண்டுமென்று கேட்டிருந்ததாயும், ஒரு வாரத்துக்குக் கேட்டிருந்தால் கிடைத்திருக்குமென்றும் ஓர் அன்பர் தெரிவித்தார். இது எப்படியாயினும், அரங்கேற்றத்தின்போது அவர் இருந்திருப்பின் அது மிகவும்சிறப்பாக இருந்திருக்கும்.

ஃ ஃ ஃ

கலைஞர்களுக்கு விசா அளிப்பதில் என்ன கொள்கை அனுஷ்டிக்கப்படுகின்றதென்பது தெரியவில்லை. சில கலைஞர்களுக்குப் பல வார விசாக்கள் கிடைக்கின்றன. சிலருக்குக் கிடைப்பது குதிரைக் கொம்பாகவுள்ளது. செலாவணியைப் பாதுகாக்க வேண்டியதுதான். ஆனால் செலாவணி நஷ்டமில்லாத முறையில் கலைஞர்கள் வருவதாயின் அவர்கள் விஷயத்தில் தாராள மனப்பான்மை காட்டக்கூடாதா?

அதுவும் திரு. சந்தானம் அவர்கள் இலங்கையிலே 4 வருடங்களுக்கு மேல் கலைத்தொண்டு புரிந்தவர். அவருக்கு இங்கு பல சிஷ்யர்கள் உண்டு. அவரது சேவை தொடர்ந்து இங்கு கிடைக்க முடியாமற்போனதைப்பற்றி பல பெற்றோருக்கு ஏமாற்றம். அவருக்கு இங்கு ஒரு மாதம் தங்கி இருக்கவும்கூட அனுமதி மறுத்தது இங்கு கலைபணி செய்த ஒரு சிறந்த பாடகருக்கு நாம் காட்டும் நன்றியோ மரியாதையோ ஆகாது.

ஃ ஃ ஃ

அடையாறு கர்நாடக இசைக் கல்லூரித் தலைவர் சந்தியாவந்தனம் ஸ்ரீ நிவாசராவ், செல்வி ஜகதாம்பிகைக்கு ஆசி கூறி அனுப்பிய செய்தி குறிப்பிடத்தக்கது.

"சென்ற ஆண்டு இப்பெண் பரீட்சை சமயத்தில் பாடுவதைக் கேட்கும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. மிக நயமான சாரீரமும், வளமிக்க கற்பனைசக்தியும் இயற்கையாகவே இராக ஆலாபனை பண்ணுந்திறனும் படைத்தவர் இவர். இவரது மனோதர்மம் மிக அபூர்வமானதாகும். உண்மையான சம்பிரதாய முறையிலே கர்நாடக இசையைப் பொழியவல்ல பாடகிக்குள்ள அம்சங்களைப் பரிபூரணமாகப் பெற்றவர் இவர். இவருக்கு சர்வசிறப்புகளையும் நல்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்."

சென்னை இசைக் கல்லூரித்தலைவர், ஈழத்தைச் சேர்ந்த ஒருகலைச்செல்வியின் திறமைபற்றி இப்படிக் கூறியிருப்பது வெறும் உபசாரமாக இருக்க முடியாது. பரீட்சையிலே முதல்தரமாகத் தேறி "சங்கீதரத்னம்". என்ற பட்டத்தையும் பெற்ற செல்வி ஜகதாம்பிகையின் எதிர்காலம் மிகச் சிறந்து விளங்குமென்று பலரும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

ஃ ஃ ஃ

அன்றுகச்சேரியில் 'மைக்' எனும் ஒலிபெருக்கி பாடகியின இயற்கையான குரலைக் கெடுப்பதாக இருந்தது. சீமையிலே இவ்வித முதல்தரமாக இசைக்கலை கச்சேரிகளில் ஒலிபெருக்கி வைக்க மாட்டார்களாம். விழாவுக்குத் தலைமைவகித்த யாழ் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா என்னிடம் தெரிவித்து 'மைக்' இல்லாமலேயே இவ்வித கச்சேரிகளை நடத்தலாமென்றார்.

'மைக்' வந்தது சில வருடங்களுக்கு முன் தான். இதற்குமுன் பல வித்வான்களும் 'மைக்' இல்லாமல் தான் பாடி இருக்க வேண்டும். 'மைக்' உதவியில்லாமலேயே நன்கு கேட்கும்படி நவீன முறையிலே சென்னையிலே கலைமண்டபம் கட்டப்பட்டுள்ளதாகக் கேள்விப்பட்டேன், அவ்விதம் நமது ஈழத்தில் எப்போது கட்டப்போகிறீர்களோ?

ஃ ஃ ஃ

வருகிற டிசம்பரில் சென்னையிலே சங்கீத வித்வத் சபை நடத்தும் இசைவிழாவுக்கு பாலக்காடுமணியைத் தலைமை வகிக்கத் தெரிவு செய்துள்ளனராம்.

ஃ ஃ ஃ

ஐ. நா. சபையிலே எம். எஸ். என்னென்ன பாட்டுகள் பாடப் போகிறாராம் தெரியுமா? சொகுசுகா (தியாகராஜர்), ஹரிஹரபுத்ரம் (தீட்சதர்), சரோஜதளனேத்ரி (சியாமாசாஸ்திரி), ஜகதோத்தாரண (புரந்தரதாசர்) போகேந்திரசாயினம் (சுவாதித் திருநாள்) புவோசேவாகு (மைசூர் வாசுதேவாச்சார்) கா வா வா (பாபநாசம் சிவன்) மீராபஜன், பஜகோவிந்தம் முதலியனவாம்.

ஃ ஃ ஃ

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நெறிகாட்டும் விகிர்தனாகிப், பூந்தாம நறுங் கொன்றை சடைக்கணிந்த புண்ணியனூர் நண்ணுங் கோயில், காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவின்ஊர் வீதி, தேந்தாமென்றரங் கேறிச் சேழிமையார் நடமாடும் திருவையாயே.

— திருஞானசம்பந்தர்

## கயரோக நிவாரண சங்க கொடித்தினம்

இலங்கைத் தேசிய கயரோக நிவாரண சங்கம் பொதுமக்கள் தாபனமாக கடந்த 18 வருடங்களாக நாட்டுற்குச்சேவை செய்து வந்துள்ளது. கயரோக நோயாளரின் தேவைகளைக் கவனிக்குமாறு அரசாங்கத்தையும் பொது மக்களையும் தூண்டியுள்ளது.

இச்சங்கம் கந்தானையில் ஹோப் ஞாபக வைத்தியசாலையையும் பிள்ளைகளுக்கென வெலிசறை நோயாளர் மண்டபத்தையும் அளித்துளது. இது நமது தீவில் கயரோகநோயுற்ற பிள்ளைகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரேயொரு தாபனமாகும். அவர்களுக்குக் கல்வியூட்டுவதற்காக ஒரு அழகான பாடசாலையும் நிறுவப்பட்டுளது.

கடந்த 15 வருடங்களாக கொழும்பிலுள்ள 2000க்கு மேற்பட்ட கயரோகத்தால் பீடிக்கப்பட்ட வறிய குடும்பங்களை வீடுகளைத் தரிசிப்பவர்கள் சந்தித்து நூற்றுக்கணக்கான பிள்ளைகளை இந்நோயினின்றும் காப்பாற்றியுள்ளனர். ஆனால், இன்னுஞ் செய்யவேண்டிய வேலைகள் பலவுள.

கடவத்தையிலுள்ள புனர்நிர்மாண நிலையத்தில் தையல்வேலை செய்யும் 14 ஆண்களுக்கும், கொழும்பில் தையல் வேலை செய்யும் 5 பெண்களுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வித வேலையைப் பெருக்குவதற்கு நிலமும், கட்டிடமும் வாங்கப்பட்டுள்ளன.

அரசாங்க உதவிபெறுத பெருந்தொகையான குடும்பங்களுக்குப் பணமாகவோ பொருளாகவோ உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதுமுழுவதும் [illegible] கங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இவ்வேலையை நிலைபெறச்செய்யவும் பெருப்பிக்கவும் பிரதேசவாரியாகத் தாபனங்களை நிறுவவேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டுள்ளது. வடபிரதேசவேலையைப் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு தாபனம் ஒருபுறம்பான நிர்வாக சபையின்கீழ் அமைக்கப்பட்டுளது. விரைவில் கட்டிடத்தையடுத்து ஒரு நிரந்தரமான கல்விக்காட்சி மண்டபத்தைதிறுவுவோகம். அங்வருபவர்கள் கயரோகத்தைப் பற்றிக் கூடுதலாக அறியத்தக்கதாகப் பயிற்றப்பட்டோர் உதவி செய்வர். இதனாற் பெருத்த செலவு ஏற்படக்கூடும். இக்கல்வி சம்பந்தமான விடயம் இலகுவானதன்று என நாம் உணருகின்றோம் எனினும் இம்முயற்சி அவசியம் என்பதை நாம உறுதியாக நம்புகிறோம். ஏனெனில் எம் அறியாமையாலேதான் மிக்க துன்பங்களும் உயிரிழப்புக்களும் நம் நாட்டிலே ஏற்படுகின்றன.

எங்கள் கொடித்தினத்திலே எங்களுக்குப் போதிய ஆதரவளிக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம். கொடிகளை விற்க உதவி செய்வதற்கும் பிரதேசவாரியாக இதனை ஒழுங்கு செய்வதற்கும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் தேவை.

திருமதி என். சி. சான்சோமி
திருமதிவி. ரி. எறட்குணரட்ன

திருமதி
எஸ். என். கனகசுந்தரம்
51. எடின்பரோ
[illegible],
கொழும்பு-7.

### கி. ஆ. பெ. 20-ம் திகதி வருகிறார்

சுழிபுரம், சனி

இம்மாதம் 20-ம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரும் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதத்தின் நிகழ்ச்சி விபரம் பின்வருமாறு: 20-9-66பிற்பகல் 2-15 மணிக்குப் பலாலி விமான நிலையம் வந்து சேரல். மாலை 5-00 மணி - கோப்பாய். இரவு 7-00 மணி- வழுக்கியாறை அம்மன் கோவில் மண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவு. 21.9.66 மாலை 7 மணி- கொக்குவில். மாலை 7 மணி- கொல்லங்கலட்டி. 22-9-66 மாலை 5 மணி- கிளிநொச்சி. 23-9-66 திருச்சிக்குத் திரும்புதல். மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் பல சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 25 வகுப்புத் தொழிலாளர் வேலை நீக்கப்பிரச்னை

## இன்று கொழும்பில் மகநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் உணவு விநியோக நிலையத்தில் வேலை செய்யும் 25 இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களை, வேலைநீக்கம் செய்வதா? இல்லையா என்று இன்று காலை கொழும்பில் நடைபெறும் மகாநாட்டில் முடிவு செய்யப்படும்.

கொழும்பு தொழில் கந்தோரில், தொழில் கமிஷனர் கூட்டும் இம்மகாநாட்டில் தொழில்மந்திரி திரு. முகமத், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, உதவி தொழில் கமிஷனர் திரு. ராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவைக் கூட்டுறவுச்சங்கத்தின் சார்பில் தேசிய தொழிற்சங்க சம்மேளன பொதுச் செயலாளர் பாரிஸ்டர் எம். சிவானந்தனும், யாழ்ப்பாணம் வகுப்பு ஊழியர் சங்கத்தின் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமானும் கலந்து கொள்வார்கள்.

அரசாங்கத்தின் கொள்கைப்படி இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களுக்கு வேலை வழங்கக் கூடாதென்றும் உணவுக் கமிஷனரின் உத்தரவின்படியும் திறைசேரி சுற்றறிக்கையின்படியும் இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களை வேலைநீக்கம் செய்ய வேண்டுமென்றும், யாழ். மக்கள் துறைமுகத்தொழிலாளர் பொதுச் சேவைக்கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் வற்புறுத்தப்படுமெனத் தெரியவருகிறது.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தில் உள்ள ஒரு பிரிவின்படி இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களை வேலைநீக்கம் செய்ய முடியாதென்றும் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் நிறைவேறிய சமயம் வேலையிலிருந்த இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களை வேலைநீக்கம் செய்ய முடியாதென்றும் யாழ் வகுப்பு ஊழியர் தொழிலாளர்சங்க சார்பில் திரு எஸ். தொண்டமான், தொழில் கமிஷனருக்கு ஆட்சேபித்துள்ளார்.

இம்மகாநாட்டில் யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவைகூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணம் வகுப்பு ஊழியர்சங்கப்பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

# 'எழுத்து உடலென்றல் பேச்சு உயிராகும்'

— பார்த்தசாரதி

கொழும்பு, சனி

''எழுத்து உடலென்றால் பேச்சு உயிராகும். எழுத்தும் பேச்சும் நன்கமைய வேண்டும்' என்று தீபம் ஆசிரியரும் தமிழ்நாட்டு எழுத்தாளருமான திரு நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) ஒழுக்க இலக்கியம் பற்றி பேசும்போது குறிப்பிட்டார். மேற்படி கூட்டம் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் உப அதிபர் திரு மு. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது. இந்தியாவில் உள்ள ஒரு தலைசிறந்த எழுத்தாளர் திரு பார்த்தசாரதி எனத் தலைவர் பாராட்டினார், திரு பார்த்தசாரதி மேலும் பேசும்போது மாணவர்கள் ஒழுக்க இலக்கியங்களைப் பயில வேண்டும். வெறும் துப்பறியும் கதைகளைப் படிப்பதனால் கோழைகளாகவே இருக்க நேரிடும், திருக்குறள் நாலடியார் முதலிய ஒழுக்க நூல்களைப் படிப்பதால் உள்ளத்தில் தூய்மை ஏற்படும். சொற்கள் சற்று மாறுன கருத்தைக் கொடுத்துவிடும்'' என்றார். பார்த்தனாகிய அர்சுனனுக்குச் சாரதியாக அமர்ந்தபடியால் கண்ணன் பார்த்தசாரதியானான். பாண்டவர்க்காக கண்ணன் தூதுசென்றான், பழைய இலக்கியத்துக்கும் புதிய இலக்கியத்துக்கும் பாலமாக அமைந்துள்ள திரு. பார்த்தசாரதி இலக்கியத்தூதுவனாக இலங்கை வந்துள்ளார்'' என்று ஆசிரியர் சண்முககுமரேசன் நன்றியுரையில் தெரிவித்தார்.

## 'நீதிக்கரங்கள்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஈழத்துக் கவிஞர்கள் ஐவரின் படைப்பான 'நீதிக்கரங்கள்' என்ற காவிய நூல் நாளை நடக்கவிருக்கும் ஈழத்தமிழ் இலக்கிய புத்தககாட்சியின்போது வெளியிடப்படவிருக்கிறது.

கவிஞர்கள் இ. நாகராஜன், அம்பி, கதிரேசர் பிள்ளை, நா. ஆறுமுகம், சி. ஆறுமுகம் ஆகியவர்களின் படைப்புகளே இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

யாழ். பொதுசன நூல் நிலையத்தினரின் சார்போடு, யாழ். பொதுசன நூல்நிலையத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்கு இரசிகமணி கனக செந்திநாதன் தலைமை தாங்குவார். ஈழத்தமிழ் புத்தகக்காட்சியைதிரு. எம். வி. ஆசிர்வாதம் ஜே. பி. திறந்துவைப்பார் யாழ். பொதுசன நூல் நிலையத்தின் பொறுப்பாளர் திரு. வே. இ. பாக்கியநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

மாலை 7-30 மணியளவில் தமிழக எழுத்தாளரும் 'தீபம்' இலக்கிய இதழின் ஆசிரியருமான திரு. நா. பார்த்தசாரதி இவ்விழாவில் உரை நிகழ்த்துவார்.

## பிரிட்டனில் 3லட்சம் ஏழைகள்

லண்டன், செப். 17

பிரிட்டனில் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பென்ஷனியர்கள் வறுமையின் பிடியில் சிக்குண்டு தவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் சிலர் பிறரது உதவியை எதிர்பார்க்கக் கூடாதுஎன்றகௌரவத்தில் வாழ்வதால் வறுமையில் நலிய வேண்டியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்க இளைஞர் எல்லையில் கைது

மொஸ்கோ, செப் 17

ஈரான்-சோவியத் எல்லையில் நடமாடித்திரிந்த 24 வயது அமெரிக்கஇளைஞரான தொமஸ் ஆர். டாசன் என்பவரைசோவியத்எல்லைஉத்தியோகத்தர்கள் தடுத்து நிறுத்திவைத்துள்ளனர். இவ்விளைஞர் அமெரிக்க சமாதான தூதுக்குழுவில் ஓர் அங்கத்தவராவர்.

# ஆசிரியருக்கு கடிதங்கள்

## சிறுபான்மைத் தமிழர் சத்தியாக்கிரகம்

கடந்த சில மாதங்களுக்கு முன்பதாக உருவாகிய சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியில் எமது ஸ்தாபனம் கலந்துகொள்ளவில்லை என்பதையாவரும் அறிவர். தமிழருக்குள் தீண்டாமை மிகவும் கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டு வந்ததை எந்தத் தமிழ் மகனும் மறுக்கமாட்டான். இது ஒரு தீய செயல் என்பதை நன்குணர்ந்த தமிழ் அரசியல் தலைவர்களும், கல்விமான்களும் தங்களுடைய பெரும் முயற்சியினால் தீண்டாமை என்னும் கொடிய நோயைப் பல துறைகளிலும் குறைத்துள்ளனர். சில காலத்திற்குமுன்பிருந்த இழிநிலையிலும் பார்க்க எமது மக்கள் இன்று சற்று முன்னேற்றமான நிலைமையிலிருப்பதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன். சமயப் பெரியார்களும், கல்விமான்களும், உயர் பதவியிலிருந்த தமிழ்ப் பெரியார்களும், தமிழினம் ஒன்று சேர்ந்து ஐக்கியப்பட்டு வாழக்கூடிய சூழ்நிலையை அமைத்துச் சில சைவ ஆலயங்களையும், தேநீர்க்கடைகளையும் சமத்துவமாகத் திறந்துவைத்தார்கள். அதையடுத்து அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு எமது சமூகத்தில் ஒருவருக்கு மேற்சபை உறுப்பினர் பதவியையும் இன்னொருவருக்கு யாழ். மாநகரசபை உப மேயர் பதவியையும் அளித்தனர்.

அன்றியும்தீண்டாமையை அறவே ஒழித்துக்கட்டும் முகமாக யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் சாதி ஏற்றத்தாழ்வுஒழிப்புச்சபை மிகவும் தீவிரமாக இயங்கி வருவதையும் சட்டமூலமாகவும், பிரசாரங்கள் மூலமாகவும், யாதயாத்திரைகள் மூலமாகவும், இன்னும் எமமின ஆசிரியர்களைச் சகல பாடசாலைகளிலும் கலந்து கடமையாற்ற வைப்பதன் மூலமாகவும் வேறுபல இயக்கங்கள் மூலமாகவும் தீவிர முயற்சி செய்துவருவதை நாம் அறிகிறோம்.

எமதுமக்களுக்கும் பெரும்பான்மைத் தமிழர்களுக்கும் இருந்தவேற்றுமைகள்குறைந்து ஐக்கியம் வளர்ந்து மனமாற்றம் ஏற்பட்டு ஒருநல்ல சூழ்நிலை அமையும் இந்த வேளையில் நாம் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பிப்பது இருபகுதியினருக்குமிடையில் இருந்த ஐக்கியத்தைக் குலைத்து வேற்றுமையை உருவாக்கும் செயலாக அமையுமெனக் கருதுகிறேன்.

எமது மன்றத்தின் சார்பில் கௌரவஉள்ளூர் ஆட்சி அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் யாம் சமர்ப்பித்த மகஜருக்கு பதிலளித்து மந்திரியும் ஏனையகட்சித் தலைவர்களும் எமதுவேண்டுகோளையேற்று சட்டத்தை அமுல்நடத்தி கிராமப் புறங்களிலுள்ள சகல தேனீர்ச்சாலைகளிலும் பொது ஸ்தாபனங்களிலும் சாதிவித்தியாசத்தை 1967-ம் ஆண்டுக்கு முன் அறவே நீக்கித் தருவதாகவும் மாவட்ட சபைகளில் எங்கள் வேண்டுகோட்படி போதிய பிரதிநிதித்துவம் அளிப்பதாகவும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் வாக்குறுதி அளித்ததை யாம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று [illegible] சமூகத் தலைவர்களில்சிலர் ஆரம்பிக்கும் சத்தியாக்கிரகம் எமது சமூக மக்களுக்குப் பெரும் தீமையை விளைவிக்கக்கூடுமெனப் பெரிதும்அஞ்சுவதற்கு இடமுண்டு.

எனவே சமூகத்தின் விடுதலையை முன்வைத்து உழைப்பவர்கள், சமூகத்தின் உண்மையான அக்கறையுள்ளவர்கள் எவராயினும் இதுவிடயமாக சிந்தித்துச் செயலாற்றுமாறு சமூகத்தின் சார்பில் வேண்டுகிறேன்.

ஆர். பி. குணரத்தினம்

காரியதரிசி

மக்கள் முன்னேற்ற மன்றம் யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

## நரகலோகப் பிரயாணம்

காரைநகர் யாழ்ப்பாணம் பஸ் சேவை ஒழுங்காக நடைபெறுததால் பிரயாணிகள் அடையும் கஷ்டங்கள் பல. காலை 6-45-க்குப் புறப்படும் பஸ்ஸில் செல்லோம் என வருகிறோம் காலம் [illegible] மதித்துவரும் பஸ் ஒரு [illegible]ல் சென்றதும் நகரமாட்டேன் என அடம்பிடிக்கிறது. 7-20 பஸ்ஸை எதிர்நோக்குகிறோம். 8-30-க்குக் கடுகதி என்ற பெயருடன் சாரதியின் முழுப்பலத்துடன் தள்ளப்பட்டு ஒருபஸ் வருகிறது. அந்தப் பஸ் 9-35-க்கு ஒட்டு மடத்தை அடைந்ததும் அதற்குமேல் அசையமாட்டாது. பிரயாணிகள் மணித்தியாலக்கணக்காகக் கால் கடுகடுக்கக் காத்திருந்த ஆத்திரத்தை பஸ் சாரதியிடம் தெரிவிக்க விரும்புகின்றனர் காலையில் மட்டும்தானுமாலையிலும் இதுதான் கதி இவ் விஞ்ஞான சகாப்பத்தில் 14 மைல் தூரத்தைக்கடந்து செல்ல காத்துநிற்கும்மணித்தியாலங்கள் எத்தனை? மேலும் இடையில் வட்டுக்கோட்டை, அராலி மக்கள் காரைநகர் எல்லையைத் தாண்டும்போதே நிறைந்து வழிந்துவரும் பஸ்ஸைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர்.

இன்று பஸ் பிரயாணம் நரகலோகப் பிரயாணம் போல இருக்கிறது. பிரயாணிகளின் கஷ்டங்களைப் போக்க இ. போ. ச. நிர்வாகிகள் முயற்சிசெய்வார்களா பாராளுமன்ற உறுப்பினர்களும் கொஞ்சம் இதில் கவனம்செலுத்துவார்களா?

க. பூரணம்,

காரைநகர்.

ஃ ஃ ஃ

## நம்பியவர்கள் நிலை

1956-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் திகதிக்குப் பின்பு அரசாங்கசேவையில் சேர்ந்துள்ள சகல தரத்திலுமுள்ள சில்லறைச் சிப்பந்திகளுக்கும் அரசகரும மொழியிலிருந்து விதிவிலக்களிக்கப்படுமெனத் தமிழ் பேசும் அரசாங்கப் பொது ஊழியர் சங்கம் எதிர்நோக்கியதற்கு நேர்விரோதமாக சில்லறைச்சிப்பந்திகள் அரசகரும மொழியில் 5-ந் தரம் சித்தியடையவேண்டுமென தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையின் முடிவை தொடர்ந்து திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ள701-ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை சில்லறைச் சிப்பந்திகளுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

1963-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை சில்லறைச் சிப்பந்திகளுக்கிடையில் பழைய, புதிய சேவைகள் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் அரசகருமமொழியில் இருந்து விதிவிலக்களிக்கப்பட வேண்டியதற்கான நியாயபூர்வமான காரணங்களை அமைச்சரவைக்கும், தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சங்கம் எடுத்துக்கூறியும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. பழைய ஊழியர், புதிய ஊழியர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் அரசகருமமொழியைப் படிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டவர்கள் இன்று புதிய ஊழியரைப்பாதிக்கும் பிரச்னைகள் தீர்க்கப்படாததைக் கண்ணுரக்கண்டபிறகும் படியுங்களென்று கூறுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது. நம்பியவர்களை நட்டாற்றில் விட்டவர்கள் இதற்கு என்ன பதில் சொல்வரோ.

பி. எஸ். அருளப்பு,

செயலாளர்,

தமிழ் பேசும் அரசாங்கப் பொது ஊழியர் சங்கம்,

மன்னார்.

## கூட்டுறவு ஆஸ்பத்திரிகளுக்கு அரசாங்க நிதியுதவி

கொழும்பு, சனி

ஆஸ்பத்திரிகள் திறப்பதற்குகூட்டுறவுச் சங்கங்களுக்குமான்யம்அளிக்கஅரசாங்கம் இப்பொழுது தீர்மானித்துள்ளது. இவ்வாஸ்பத்திரிகளுக்கு நிதியுதவி முதல் ஐந்துவருடங்களுக்கு அளிக்கப்படும்.

ஆஸ்பத்திரியின் முழுக் கட்டடச் செலவினதும் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாக இம்மானியம் இருக்காது:

முதலில், ஏற்கெனவே உள்ள கூட்டுறவு ஆஸ்பத்திரிகளுக்கு மட்டுமேநிதியுதவி வழங்குவதென்றே தீர்மானிக்கப்பட்டது,

ஆனால், மக்களின் சுகாதாரத்தைப்பொறுத்தவரை அரசாங்கத்தின் பளுவைக் குறைக்கும் நோக்கத்துடன் சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன, புதிய தீர்மானத்தை முடிவு செய்துள்ளார், நாட்டின் மூலைமுடுக்குகளிலுள்ள கிராமப்பகுதிகளில் வாழும் மக்களுக்கும் ஆஸ்பத்திரி வசதிகள் அளிக்க இப்புதியமுறை உதவி வழி வகுக்கும்.

## மணிவண்ணன் நாளை இங்கு வருகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஈழம் வந்துள்ள 'தீபம்' ஆசிரியர் பார்த்தசாரதி நாளை மட்டக்களப்பிலிருந்து விமானமார்க்கமாக பலாலி வந்திறங்கும்போது அவருக்கு மாவிட்டபுரம் இலக்கிய நண்பர்கழகம் வரவேற்பொன்றை அளிக்கும். யாழ் இலக்கிய வட்ட அங்கத்தவர்களும் பலாலி விமானத்தளத்துக்குச் சென்றுதிரு. பார்த்தசாரதியை வரவேற்பர்.

## லண்டன் செல்கிறார்

உடுவில், சனி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலையில் உபஅதிபரும் வர்த்தக ஆசிரியருமான திரு. எஸ். டி. ஜெகசிங்கம் இம்மாதம் உபகாரநிதியில் விசேஷ பயிற்சிபெறுவதற்காகலண்டன் செல்கிறார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பலகாலம் ஆசிரியராகக்கடமையாற்றியிருக்கிறார். காமன்வெல்த் உபகாரநிதி அடிப்படையில் மேலும் ஒருவருட விசேஷபயிற்சி பெறுவதற்காக இம்மாதம் 24-ந் திகதி தனது குடும்பத்துடன் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து லண்டனுக்குப் புறப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புமூலம் மழை!

நெருப்புமூலம் மழையை வரவழைக்கச் செய்யும் முயற்சியில் இப்போது விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த முயற்சியில் சுவிடிஷ், அமெரிக்க, பிரெஞ்சு விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த முயற்சியில் ஆபிரிக்காவிலுள்ள காடொன்றில் தெரிந்தெடுக்கப்பட்ட 25 ஏக்கர் வரையான காணியில் நெருப்பு எரிக்கப்பட்டு பரிசோதனை நடத்தப்பட்டது. இந்தப் பரிசோதனையின்போது புயல் வீசியது. இடி இடிக்கத் தொடங்கியது. பின்னர் மழைபெய்யத் தொடங்கியது.

பபிலோனியாவில் 1498-ம் வருடத்தில் இவ்விதம் பெரிய அளவில் நெருப்பு எரிக்கப்பட்டபோது முகில் கூட்டங்கள் தோன்றின என அறியப்படுகிறது. தீயினால் மழையை வரவழைக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் அப்போதுதான் முதலில் தோன்றியிருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது.

நெருப்புமூலம் மழையை வரவழைக்கும் முயற்சியில் உழைத்துவரும் பிரெஞ்சு பேராசிரியர் டெசன்ஸ் நெருப்பை நவீன உலைகளில் தோற்றுவித்து மழையை வரவழைக்கலாமா என்ற பரிசோதனையில் இப்போது ஈடுபட்டுள்ளார்.

## விமானக் கார்

வீதியில் காராகவும் வானத்தில் விமானமாகவும் பயன்படக்கூடிய புதுமையான ஹெலிகாப்டர் ஒன்று மேற்கு ஜெர்மனியில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விமானக்காரை இயக்கும் முறையை வெகு எளிதில் கற்றுக் கொள்ளலாமாம். இதில் நான்குபேர் தாராளமாகச் சொல்லலாம

## ஒரு குண்டுமணிக்குள் 300 யானைகள்!

கோவையிலுள்ள கேரள அரசாங்க கைவினைப் பொருட்கூடத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஒரு கலைப்பொருள் ஒரு குண்டுமணி. இந்த சிவப்பு குண்டுமணியின் ஒரு பாகத்தில் மெல்லிய துளையிட்டு அதனுள் தந்தத்தால்செய்த கண்ணுக்குப் புலப்படக்கூடிய அளவு 300 யானைகள் அடைக்கப்பட்டு அதன்மேல் தந்தத்தால் செய்த இரு குட்டியானைகள் அத்துவாரத்தை மூடும்வண்ணம் வைத்துள்ளனர்.

## பிளாஸ்டிக் மோட்டார் கார் வீதியில் செல்லலாம்

முற்றிலும் பிளாஸ்டிக் தகட்டினால் போர்த்தப்பட்ட மோட்டார் கார் பிளாஸ்டிக் சாலையில் பறக்கும் காலம் வரப்போகிறது. இவ்வித பிளாஸ்டிக் சாலைகள் எல்லாவித காலநிலைகளிலும் பயன்படுத்துவதற்கு ஏற்றது. சமீபத்தில் நூரம்பர்க் நகரில் நடந்த கண்காட்சியில் மேற்படி பிளாஸ்டிக்கார் இடம்பெற்றிருந்தது.

## இஸ்ரேலின் வைரம் 8,000 பேர் வேலை செய்கிறார்கள்

வைரக்கற்களை இஸ்ரேல் அதிகமான அளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்தத் தொழிலில் 8,900 பேர் இப்போது வேலைசெய்கிறார்கள். பெல்ஜியத்துக்கு அடுத்தபடியாக இதுவிஷயத்தில் இஸ்ரேல் நிற்கிறது. கோடிக்கணக்கான ரூபாவை இஸ்ரேல் வைரத்தால் சம்பாதிக்கிறது.

## அமெரிக்காவும் பாம்புக்கடியும்

அமெரிக்காவில் ஒரு வருடத்தில் 7,000 பேருக்கு பாம்பு கடிக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## றேடியோ இயக்கும் பாரந்தூக்கி

றேடியோ கட்டுப்பாட்டு முறையுடன் கூடிய ஒரு பாரந்தூக்கி (பாரம் தூக்கும் இயந்திரம்) ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## பீட்டர் டவுண்செண்ட் பிரிட்டன் திரும்பினர்!

மார்கிரட் இளவரசியை மணமுடிக்கவிருந்த திரு. பீட்டர் டவுண்செண்ட் அது நிறைவேறாத காரணத்தினால் பிரிட்டனைவிட்டுக் கிளம்பினாரல்லவா? இப்போது இவர் மீண்டும் தமது தாய்நாட்டுக்கு தமது பெல்ஜியதேசத்து மனைவியுடனும் மக்களுடனும் திரும்பியுள்ளார்.

[illegible] வருடங்களுக்குப்பின் பிரிட்டனுக்கு வந்துள்ள திரு. டவுண்செண்டுக்கு இப்போது வயது 51. இவருக்கு இருபெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் உண்டு.

லண்டன் நகரில் பார்க்க வேண்டிய முக்கியஇடங்களை இவர் தமது மனைவிக்கு இப்போது காட்டிக்கொண்டிருக்கிறார். பிரிட்டனிலேயே இவர் தங்கி வேலைபார்க்கவும் நோக்கம்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

## என்ன நடக்கிறது?

சேகரிப்பு: க. கணேசலிங்கம்

## சூரியனால் குளிர்!

வெயில் காலத்தில் இல்லங்களைக் குளிர்படுத்த சூரிய சக்தியால் இயங்கும் ராட்சத குளிர்பதனப் பெட்டியொன்றை சோவியத் யூனியனிலுள்ள துர்க்மேனியாவில் விஞ்ஞானிகள் பரிசீலனை செய்து வருகிறார்கள். இந்தப் பிரயத்தனம் சம்பூரண வெற்றியடையும்போது இன்று பாவனையில்உள்ள மின்சாரக் குளிர்பதனப் பெட்டிகள் உலகம் பூராவும் கைவிடப்படவேண்டிய நிலை ஏற்படும்.

## பிரிட்டனில் 5 லட்சம் பேர் இருதய நோயினால் மரணம்

பிரிட்டனில் சென்ற வருடம் 5லட்சம் பெண்களின் கணவர்கள் இருதய நோயினால் காலமானார்கள். இதனால் 5 லட்சம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இந்த இருதய நோய்க்கு சிகரெட் புகைப்பதும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

## மேற்கு ஜெர்மன் பொருட்காட்சி

பே. பெர்லின், செப். 17

மேற்கு ஜெர்மனியில் வருடாந்தப் பொருட்காட்சி நேற்று இங்கு ஆரம்பமாகியது. அத்துடன் கூடவே 'முன்னேற்றத்தில் பங்காளிகள்' என்ற காட்சியில் 21 ஆபிரிக்க, 14 ஆசிய, 11 லத்தீன், அமெரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதிப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## தலைமை ஆசிரியர் தலைமயிரைவெட்டினர்

பிரிட்டனிலுள்ள ஒருபாடசாலை மாணவனான 17 வயதுடைய அலன்புரூடன் ஜி. சி. ஈ. பரீட்சை எழுதச் சென்றிருந்தபோது 'பீட்டில்ஸ் ஸ்டைலில்' அதாவது முடியை அளவுக்குமீறி வளர்த்து ஒழுங்காக வாராமல் சென்றிருந்தான். பரீட்சை ஆரம்பமாகியது. புரூடனின் பின்னால் நின்ற ஒரு கை அவனை எழுதவிடாது தடுத்தது. திரும்பிப் பார்த்தான்புரூடன், தலைமையாசிரியர் திரு. டபிள்யு. எஸ். கார்டோஸ்தான் அவன்பின்னால் கத்தரிக்கோலுடன் நின்றுகொண்டிருந்தார். தலைமயிரை ஒழுங்காகவெட்டினார் தலைமை ஆசிரியர். இதன் பின்னரே அலன்புரூடன் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டான்.

## ஏற்றுமதி செய்யக்கூடிய ஹோட்டல்

உலகில் எந்தப் பகுதிக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய புதிய வகையிலமைந்த பெரிய ஹோட்டல்களை பிரிட்டனில் இப்போது கட்டத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த ஹோட்டல்கள் ஒவ்வொன்றின் நிறை 2,500 தொன்கள்.

## மணலால் வீடுகள்!

பாலைவனத்தில் மணலை ஏராளமாகச் சேர்த்து சோவியத் விஞ்ஞானிகள் வீடு கட்டத் தொடங்கியிருக்கிறார்கள். செங்கற்களுக்குப் பதிலாக காலசியம் சிலிகான காங்கிரீட்டில் ஏராளமாக மணலைச் சேர்த்து உறுதியான நல்ல காங்கிரீட்டாகப் பயன்படுத்துகிறார்கள். இந்தப் புதிய காங்கிரீட் வீடுகள் [illegible]

## பூமிக்கு வந்துள்ள விண்வெளிப் பொருள்

நான்கு மாதங்களாக விண்வெளியில்வலம்வந்துகொண்டிருந்த ஒரு அஜினா ஸர்தியிலிருந்து விண்துகள் சேகரிப்புக்கருவியை எடுத்துவரத் தாம் இருதடவைகள் போய் வரவேண்டியிருந்ததென விண்வெளியில் நடந்த விமானி மைக்கேல் கொலின்ஸ் வெளியிட்டுள்ளார். இக்கருவியை எடுத்துவந்தது தான் பத்தாவது ஜெமினி பிரயாணத்திலேயே சிறப்பு அம்சமென்று அவர் குறிப்பிட்டார்.

கருவியில் குறைந்தது ஒரு விண்துகளாவது பிடிபட்டிருக்கிறது. அது எதனால் ஆனது, எப்படித் தோன்றியது என்று விஞ்ஞானிகள் தற்போது ஆராய்ந்து வருகின்றார்கள். ஒரு மில்லிமீட்டரில் பத்தாயிரத்தில் ஒரு பங்கு அளவுள்ளது இந்த விண்துகள். மனிதன் முதல் தடவையாகப் பூமிக்குக் கொண்டுவந்துள்ள விண்வெளிப் பொருளாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

[illegible]

## 3 வேலைகள் செய்யும் நீர் பாய்ச்சும் இயந்திரம்

சோவியத் நீர்ப்பாசனநிபுணர்கள் பருத்திப் பண்ணைகளின் உபயோகத்துக்கான புதிய இயந்திரங்களை உற்பத்தி செய்திருக்கிறார்கள். இது வேர்களுக்கு நேரடியாக தண்ணீரை செலுத்தும்போது மூன்று பணிகளாற்றப்படுகின்றன. நீர் பாய்ச்சப்படுகிறது; உரம் போடப்படுகிறது; நிலத்தைப் பிளந்து மண்கட்டிகளைத் தவிடுபடுத்துகிறது.


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட
- ரி சேட்
- ரெறி சேட்
- ரெறி பிளவுஸ
- பேபி வெஸ்ட்
- காலமேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரயாணிகள் தங்கும் இடம் அமைக்க ஒருவழி

## "பஸ் நிலையங்களை இ. போ. சபைக்கு குத்தகைக்கு கொடுப்பது"

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஸ்தலஸ்தாபன சபைகள் பஸ் நிலையங்களை, குத்தகையாக தந்தால் பிரயாணிகளுக்கு வசதியாக தங்குமிடம், கியூமுறை, மற்றும் சௌகரியங்களை செய்து கொடுப்போமென்று இலங்கை போக்குவரத்துசபை உத்தியோகத்தர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வழக்கமாக ஸ்தலஸ்தாபன சபைகள்தான் தாங்கள் பகுதிகளில் பஸ் நிலையங்களை பிரயாணிகளுக்கு வசதியாக அமைத்துக்கொடுக்க வேண்டுமென்றும், அவர்களால் முடியாவிட்டால் இலங்கை போக்குவரத்து சபைக்கு நிலத்தை குத்தகையாக கொடுத்தால் பஸ் நிலையம் அமைத்துக் கொடுக்கப்படு மென்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்தலஸ்தாபன சபைகளால் கட்டப்படும் பஸ் நிலையங்கள் பிரயாணிகளுக்கான வசதிகளோடு அமைந்திருந்தால் மாதமொன்றுக்கு ஒரு பஸ்ஸிற்கு போக்குவரத்து சபை 6 ரூபாய் ஸ்தலஸ்தாபனசபைக்கு கொடுக்கிறது சாதாரண பஸ் நிலையமாக இருந்தால் மாதம் பஸ் ஒன்றிற்கு நான்கு ரூபாய் கொடுக்கின்றது.

சாவகச்சேரிக்கு நவீன பஸ் நிலையம் அமைத்துத் தரும்படி அண்மையில் தென்-யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள்சங்கம் பிரதேசமுகாமையாளரிடம் கோரியிருந்தது. அத்துடன் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். டி. சிவகுரு சாவகச்சேரி பஸ் நிலையத்தை இலங்கை போக்குவரத்துசபை தான் கட்டவேண்டுமெனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவை சம்பந்தமாக நமது நிருபர், இலங்கை, போக்குவரத்து சபை உத்தியோகத்தர் ஒருவரைக் கேட்டபொழுதுதான் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஒரேமாதத்தில் 205 இ. போ. சபை குற்றங்கள்

கொழும்பு, ஞாயிறு

இவ்வருடம் ஜூலை மாதத்தில் இ. போ. ச. டிரைவர்கள், கண்டக்டர்கள் சம்பந்தப்பட்டுள்ள 205 குற்றங்கள் இ. போ. ச. திடீர் சோதனை அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 177 குற்றங்கள் பாரதூரமானவை.

டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வதில் 118 குற்றங்கள் அவ்வதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டன. இரட்டிப்புக் கட்டணத் தண்டனை மூலம் இம் மாதத்தில் ரூபா 642-75 சதம் வருமானத்தை இவர்கள் இ. போ. ச. வுக்குத் தேடித் தந்துள்ளனர்.

டிரைவர் ஒருவரின் அடையாள அட்டையைப் பாவித்துப் பிரயாணஞ்செய்தவர் ஒருவர் நாரென்பிட்டிப் போக்குவரத்து நீதவானால் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

இத்துடன் இவ்வதிகாரிகளின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து நடாத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை விசாரணையின் பின் இ. போ. ச. வைச் சேர்ந்த 46 ஊழியர்கள் தண்டனைக்குள்ளாகினர்.

இந்த 46 பேரில் இருவர் வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர். நான்கு பேர் வேலையினின்றும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டனர். 27 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. 13 பேர் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

ஜூலை மாதத்தில் மடு, கதிர்காம விழாக்களுக்கென விசேஷ திடீர் சோதனை அதிகாரிகள் அனுப்பப்பட்டனர். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்துக்கும் விசேஷ குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்டது.

## சமய அறிவுப் பரிசளிப்பு விழா

காரைநகர் சனி

காரைநகர் கிழக்கு இந்து வாலிபர் சங்கம் நடத்திய சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா வரும் ஞாயிற்றுக்கிழமை கரப்பிட்டியந்தனை பிள்ளையார் கோவில் சயிற்றுத் திருவிழாவின்போது நடைபெற இருக்கிறது.

## ஆசிய அபிவிருத்தி வங்கி மசோதா

கொழும்பு, சனி

ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்யும் மசோதா நேற்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் ஆசிய தூரகிழக்கு நாடுகளுக்கிடையே பொருளாதார இணைப்பையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தலாமென பதில் நீதி மந்திரி திரு. எம். டி. விமலசேன கூறினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் கிடைக்கும் கடனுதவிகள் தேசிய அபிவிருத்தி வங்கிகள் மூலமாக அளிக்கப்பட வேண்டுமென்று பல எம். பி.க்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி வங்கிகளுடன் தொடர்பு கொள்ளவேண்டியது அவசியமென்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூன்றாவது பிராந்திய மகாநாடு நேற்று டோக்கியோவில் மூன்று நாட்களாகக் கூடிய பின் முடிவுற்றது. இம்மகாநாட்டில் இலங்கை உட்பட 15 நாடுகள் பங்கு பற்றின.

## 500 கிராமங்களுக்கு மின்சக்தி

கொழும்பு, ஞாயிறு

1970ம் ஆண்டுக்கிடையில் 500 கிராமங்களுக்கு மின்சாரவெளிச்சம் அளிப்பதே காணி, நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் ஐந்துவருட அபிவிருத்தின் திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு வருடத்திலும் 100 கிராமங்களுக்கு மின்சக்தி அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்படி 1965-66ம் வருடத்துக்கு 100கிராமங்களுக்கு மின்சக்தி அளிக்கும் பாரிய வேலைத்திட்டமொன்றை அரசாங்க மின்சார வேலைகள் இலாகா மேற்கொண்டுள்ளது.

## வேலையற்ற பட்டதாரிகள் இரு மடங்காகியது

கொழும்பு, ஞாயிறு

கடந்த 12 மாதங்களில் இந்நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் தொகை இரட்டிப்படைந்துள்ளது.

எழுதுவினைஞர் உத்தியோகங்களுக்குப் பதிவு செய்துள்ள வேலையற்ற பட்டதாரிகளின் தொகை கடந்த 12 மாதங்களில் இரு மடங்காகக் கூடியுள்ளது என்று மத்திய தொழிற் சந்தோர் ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். பள்ளிக்கூட ஆசிரியர் வேலைக்கான வாய்ப்பு மிகவும் குறைந்துவிட்டதன் பயனாகவே, எழுதுவினைஞர் தொழிக்குப் பட்டதாரிகள் விண்ணப்பிக்க முன்வந்துள்ளனர்.

வேலையற்றோருக்கான தொழில்பதிவுச் சந்தோர்களை பெரல்லை, ராஹர, கொழும்புவடக்கு கொழும்பு தெற்கு ஆகியஇடங்களிலும் விரைவில் நிறுவ தொழில் இலாகா திட்டமிட்டுள்ளது. மத்திய தொழிற்சந்தோரில் உள்ள நெருக்கடியைத் தணிக்கவும், கொழும்பு முனிசிப்பல் எல்லைக்கு அப்பாலுள்ளவேலையற்றோருக்கு வசதியளிக்கவுமே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படும்.

## பிரயாணிகள் சங்கம்

சுழிபுரம், சனி

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தமக்கென புதிய பஸ் பிரயாணிகள் சங்கமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

புதிய நிர்வாகிகள்பின்வருமாறு:- தலைவர்: திரு. எம். வேலுப்பிள்ளை; உபதலைவர்: திரு. க. ஏகாம்பரம்; செயலாளர்கள்: திரு. எஸ். ஈ. தேவநாயகம், திரு. த. இராசலிங்கம்; பொருளாளர்: திரு. ஏ. ஜே. இம்மானுவேல்; உதவிப் பொருளாளர்: திரு. எஸ். இராயப்பு; கணக்குப்பரிசோதகர்: திரு. எம். செல்லையா.

## "தொழிலாளரே காரணம்!"

யாழ்ப்பாணம், ஞாயிறு

தோட்டத்தொழிலாளர்களில் பலர் இதுவரைகாலமும் கையாண்ட கொள்கைகளும் நடைமுறைகளுமே இந்திய வம்சாவளித்தோட்டத்தொழிலாளர் இன்னலுக்குக்காரணமென்றும், இந்நாட்டில் முற்போக்குத் தொழிற் சங்க இயக்கத்திலிருந்து தம்மைத் தனிமைப்படுத்தியமையே இந்த இன்னல்களுக்கு வழிவகுத்ததென்றும் இலங்கைத்தோட்டத்தொழிலாளர் சங்கம் முதலாளிமார் சம்மேளனத்திற்குச் சமர்பித்த 12கோரிக்கையில் தெரிவித்துள்ளது.

## புறக்டர்-முதலியார் தாக்குதல் வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

புறக்டரும் முதலியாரும் நீதிமன்ற வளவிற்குள் ஒருவரையொருவர் தாக்கியதாக இருவர்மீதும் சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நாளை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ரூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்படும்.

இவ்வழக்குகளில் 1966ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி சாவகச்சேரி நீதிமன்ற வளவிற்குள் புறக்டர் சி. பாலகிருஷ்ணனும், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற முதலியார் பி. வேலாயுதம் பிள்ளையும் ஒருவரையொருவர் தாக்கியதாக இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# சாம்பியன் காஸியஸ்கிளே அடுத்த மோதலுக்கு தயார்!

## கிளாவ்லாண்டுடன் நவம்பர் 14ல் பொருதுவார்

ஹவுஸ்டன், (டெக்ஸாஸ்) சனி

உலக அதிபாரக் குத்துச்சண்டைச் சாம்பியன் காஸியஸ் கிளே அடுத்த மோதலுக்குத் தயாராகிவிட்டார். இங்குள்ள இன்னொரு குத்துச்சண்டை சவால்வீரரான கிளவ்லாண்ட் வில்லியத்துடன் நவம்பர் 14-ந் தேதி பொருதப்போகிறார்.

17 ரவுண்ட் அதிபாரக் குத்துச்சண்டையொன்றுக்கான இந்த ஒப்பந்தத்தில் கிளேயும், வில்லியமும் கைச்சாத்திட்டுக்கொண்டனர். 66,000 பேர் அடங்கியிருக்கக்கூடிய இடத்தில் இவர்கள் மோதுவார்கள்.

மேற்கு ஜெர்மன் அதிபாரக்குத்துச் சண்டை சவால் வீரரான கார்ல்மில்டன் பேர்க்கரை இம்மாதம் 11ந் தேதி பிராங்வேர்ட்டில் நடந்த போட்டியில் கிளே 12-வது ரவுண்டில் தோற்கடித்து நான்காவதுதடவையும் சாம்பியனாகியிருந்தார். வீரர் கிளேயால் தோற்கடிக்கப்பட்ட மற்ற மூன்று வீரர்களும் வருமாறு:— கனடாவைச் சேர்ந்த ஜோர்ஜ் சுவாலோ, பிரிட்டனைச் சேர்ந்த ஹென்றி கூப்பர், பிரெயின் லண்டன்.

## "பாகுபாடின்றி நடத்துகிறோம்"

காலி, ஞாயிறு

"பௌத்த மதத்திற்குத் தகுந்த இடம் இந்நாட்டில் இன்னமும் கொடுக்கப்படவில்லை. ஆட்சியிலிருந்த ஒவ்வொரு அரசாங்கமும் மதம் பற்றிப் புகழ்ந்து கூறியிருக்கிறது. ஆனால் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை" என்று சமூக சேவைகள் மந்திரி திரு. அசோகா கருணரத்ன, பத்தேகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. எச். டபிள்யு. அமரசூரியா தலைமைவகித்தார்.

மந்திரி திரு. கருணரத்ன தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: தேசிய அரசாங்கம் எல்லோரையும் சாதி, சமய வேற்றுமையின்றி நடாத்திவருகின்றது. மேலும் கமத்தொழில் கைத்தொழில் அபிவிருத்திக்காக அரசாங்கம் பெருந்தொகையான பணத்தை ஒதுக்கியிருக்கிறது.

## நிரந்தரக்காரியதரிசி விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீதி அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. டி. ஜே. ஆர். குணவர்த்தன உத்தியோக பூர்வமாக நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு விஜயம் செய்தார்.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட் காரியாலயத்தையும், மாவட்ட நீதிமன்ற காரியாலயத்தையும் அவர் பார்வையிட்டார்.

## திறைசேரிசுற்றறிக்கை பற்றி ஆராயும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ் அரசாங்க ஊழியர் சம்பந்தமாக திறைசேரி வெளியிட்டிருக்கும் இரு சுற்றறிக்கைகளை வாபஸ்பெறக் கோரவேண்டுமென்ற தீர்மானம் இன்றுகூடும் தமிழரசு வாலிப முன்னணியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

## 45 நிமிடங்கள் தாமதம்

சங்கானை, சனி

இன்று காலை 5-45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலை, காரைநகர் புறப்பட்ட பஸ் வண்டிகள் பஸ் நிலையத்தை விட்டுப்பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு டீசல் அடிப்பதற்கு டீசல் நிலையத்திற்குச் சென்ற பொழுது அங்கு வேலை செய்பவர் காலதாமதமாக வந்தபடியால் வண்டிகள் இரண்டும் 45 நிமிடங்கள் அங்கு தாமதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பிரயாணிகள் கஷ்டத்திற்குள்ளானார்கள்.

## கொடித்தினம்

இமயாணன், சனி

யாழ்ப்பாணப் பகுதிகளில் இந்தவாரம் கொடித்தினம் நடைபெறுகிறது. யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவா சபையினர் நடத்தும் இத்தினத்தில் குருடர், செவிடர், ஆருமநோர், தன்றுபிணியோர், கசரோகிகள் முதலானவர்களின் துன்பம் துடைப்பதற்காக பொருள் திரட்டப்படுகிறது. இதற்கு எல்லோரையும் ஆதரித்து உதவிசெய்யும்படி யாழ். மாவட்ட சமூகசேவா சபையினர் பகிரங்கவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பெந்தர-எல்பிட்டி உப தேர்தல்

### செப். 22ல் விண்ணப்பங்கள்

காலி, சனி

பெந்தர-எல்பிட்டி உப தேர்தலுக்கான தேர்தல் விண்ணப்பங்கள் காலிக்கச்சேரியில் செப்டம்பர் 22ந் திகதி காலை 10 மணிக்குத் தேர்தல் உத்தியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தேர்தலில் யூ. என். பி. அபேட்சகராக நிறுத்தப்பட்டிருப்பவர், இத்தொகுதி ஆசனமிழந்த திரு. ஆர். ஸி. சமரநாயக்காவின் சகோதரரான திரு. கொலின் சமரநாயக்கா ஆவர்.

## திருவைந்தெழுத்து போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அடுத்த மாதம் 6-ந் திகதி காலை திருவைந்தெழுத்து எழுதும்போட்டி ஒன்று நடைபெறவிருக்கிறது. இப்போட்டி கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் நடைபெறும். இதில் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.

## சனசமூகநிலைய புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் சனசமூக நிலைய வருடாந்தக்கூட்டம் நிலையமண்டபத்தில் திரு. சி. பிலிப்புப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சி. பிலிப்புப்பிள்ளை, காரியதரிசி திரு. எஸ். பி. [illegible], தனாதிகாரி திரு. எஸ். அந்தோனிசாமி.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் மீது எதிர்க்கட்சி சீற்றம்

# நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவர முன் அறிவிப்பு

## தொடம்பே முதலாளி மரணம்பற்றிய தீர்ப்பின் எதிரொலி

கொழும்பு, வெள்ளி

**தொடம்பே முதலாளி என்பவரின் மரணம் தற்கொலையல்ல, அது ஒரு கைமோசக் கொலைதான் என்று கொழும்பு கோட்டை நீதவான் அளித்துள்ள தீர்ப்பை அடிப்படையாக வைத்து அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு மக்கள் பிரதிநிதிகள் சபையில் இன்று எ.ர்க் கட்சியினர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.**

தொடம்பே முதலாளி என்றழைக்கப்படும் பொடி அப்புஹாமி சதிவழக்கின் புலன்விசாரணைகளின்போது இரகசியப் பொலிஸ் தலைமைக்காரியாலய கட்டிடத்திலிருந்து விழுந்து மாண்டார். இவரது மரணம் முதலில் தற்கொலைஎன தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. மாண்டவரின் உறவினர்களின் மனுவொன்றைத் தொடர்ந்து நடைபெற்ற மறுவிசாரணையின்பின், தற்கொலையல்ல; கைமோசக் கொலையென்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தொடம்பே முதலாளியின் கைமோசக்கொலைசம்பந்தமாக புலன்விசாரணைசெய்வதற்கு குருணாகலை பொலிஸ் சுப்பிரின்டெண்ட் திரு. எலியன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டதனால் நீதிநிர்வாகத்துக்கு ஏற்படக்கூடிய அபாயம் குறித்து சபை விவாதிக்கவேண்டும் என்று அவசரப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. நீல் டி அல்விஸ் கொண்டுவந்தார்.

இந்தப் பிரேரணையை விவாதிக்க அனுமதிப்பதா இல்லையா என்பது பற்றித் தாம் நாளையதினம் தீர்ப்பு கூறுவதாக உபசபாநாயகர் பதிலளித்தார்.

இந்தப் பிரச்சினை மிக முக்கியமானது என்றும் அது பற்றி விவாதிக்கும் சந்தர்ப்பம் இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறதென்றும் திரு பீட்டர் கெனமன் கூறினார்.

திரு. ஸ்டான்லி திலகரத்ன பேசுகையில் திரு. பெர்னாண்டோ ஏற்கனவே புலன்விசாரணைகள் செய்து வருவதாகவும் இரகசிய பொலிஸ்காரியாலயத்தில் தஸ்தாவேஜுகளை எல்லாம் அவர் கிண்டி கிளறி வருவதாகவும் புலன்விசாரணைகளிலிருந்து திரு. பெர்னாண்டோ ஒதுக்கிவைக்கப்படுவதற்கான உறுதியளிக்க வேண்டும் என்றும் கூறினார். புலன்விசாரணையிலிருந்து ஒதுக்கப்படுவார் என்று ராஜாங்கமந்திரி உறுதியளித்தார்.

நம்பிக்கையில்லா பிரேரணை மாஜிஸ்டிரேட்டுக்கு எதிராக அமையவேண்டுமென்றும் முதலில் தற்கொலையென்று தீர்ப்பளித்து பின்னர் கொலையென்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்றும் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு பிரேமதாஸா கூறினார். இவை அவசியமற்ற பொறுப்பற்ற வார்த்தைகள் என்று உபசபாநாயகர் கூறினார். அதன் பின் சபை தனிப்பட்ட அங்கத்தவர்களின் பிரேரணைகள் பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தது.

## பொலிஸ் அதிகாரி பற்றி செனட்டிலும் பிரஸ்தாபம்

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி மரணம் விஷயத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும் பொலிஸ் அதிகாரிகள் பற்றி புலன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பொலிஸ் சுப்பிரீண்டன்ட் எலியன் பெர்னாண்டோ சம்பந்தமாக செனட் சபையில் தனிப்பட்ட அங்கத்தவர்களின் கேள்வி நேரத்தில் பிரச்சினை எழுப்பப்பட்டது

செனட்டர் ரெஜி பெரேரா பேசுகையில் அந்த விசாரணை நடத்த நேர்மையும் தகுதியும் வாய்ந்த ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றார். இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரி மாத்தறையில் இருந்தபோது அவரைப் பற்றி 1960-ம் ஆண்டில் திரு. நீல் டி அல்விஸ், பேர்ஸி பெர்னாண்டோவும் கண்டனங்கள் தெரிவித்திருப்பதாகவும் அதை இப்போது உள்நாட்டு மந்திரியாக இருக்கும் தஹநாயகாவும் ஆதரித்ததாகவும் அவர் கூறினார்.

மாத்தறையில் அந்த அதிகாரி கடமையாற்றிக் கொண்டிருந்த போது ஆடுகள் காணாமல் போவதற்கும் பொலிஸ் புகார் புத்தகம் காணாமல் போவதற்கும் காரணமாய் இருந்திருக்கிறார் என்றும் தொடம்பே முதலாளியுடன் ஏதோ ஒரு தகராறில் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் செனட்டர் ரெஜி பெரேரா கூறினார்.

செனட்டரின் கூறிய விஷயங்களை சம்பந்தப்பட்ட மந்திரிகளின் கவனத்துக்கு கொண்டு வருவதாக செனட் தலைவர் டாக்டர் எம் வி. பி. பீரிஸ் வாக்களித்தார்.

## 'போலினை அழைத்து கிரிம்பகந்த பேசினார்'

### கோதபய கொலை வழக்கில் தெகிவளை வாசி சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

கோதபாயாவின் மரணம் கொலையெனத்தீர்ப்பளிக்கப்பட்டது தமக்குத்திருப்தி அளிக்காததால் கோதபாயாவின் மரணம்பற்றி புதிதாக விசாரணை செய்ய வேண்டுமெனத்தாம் வற்புறுத்தியதாக கிரிம்பகந்தாவின் உறவினரான சிபல் பெர்னாண்டோ இன்றுகொழும்புதெற்கு மாஜிஸ்திரேட் முன் கோதபாயாகிறம்பகந்தவின் கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

கோதபாயாவின் மரணம் பற்றி உறவினர்கள் கூறிய யோசனைகள் அனைத்தையும் கிரம்பகந்தா நிராகரித்து இருவரின் மரணச்சடங்குக்கு ஏற்பாடுசெய்தாரென்றும் சிபல் பெர்னாண்டோ கூறினார்.

தெகிவளையைச்சேர்ந்த மார்ட்டின் வர்ணகுலசூரியா சாட்சியமளிக்கையில் கிறம்பகந்த ஒருநாள் தனது வீட்டுக்கு வந்து தனது மகனை அனுப்பி போலின் குருஸைக்கூப்பிட்டதாகவும் பின்னர் அவர்கள் தமது வீட்டிலிருந்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்ததாகவும், போலின் குருஸ் அங்கு வந்துபேசிக் கொண்டிருந்ததை தனது வீட்டுச்சொந்தக்காரர் ஆட்சேபித்ததைத்தொடர்ந்து அவர்கள் சென்றுவிட்டதாகவும் கூறினார்.

## பெண் மீது லஞ்ச வழக்கு

### அக்.7-ல் விசாரணை

கொழும்பு, வெள்ளி

லஞ்சக்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ள கல்கிசையைச் சேர்ந்த திருமதி டூல்வெல இன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். ஆர். விஜயதிலகா முன் ஆஜரானார்.

தாம் சுற்றவாளி என திருமதி டூல்வெல கூறினார்.

கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் பொருட்காட்சிக்கென மின்சார தீப அலங்காரம் செய்வதற்கு ஒப்பந்தம் எடுத்துக் கொடுத்தால் அந்தத் தொகையில் பதினைந்து சதவீதத்தொகை தமக்குத் தரப்படவேண்டுமென திருமதி டூல்வெல ஒரு ஸ்தாபனத்திடம் கோரியதாக இவ்வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை அடுத்த மாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## சாம்ராஜ்ய மாநாட்டில் இந்தோ-பாகிஸ்தான் பிரச்சனை

லண்டன், செப்.17

சாம்ராஜ்ய நாடுகள் மாநாட்டில் இந்தோ-பாகிஸ்தான் தொடர்புகள்பற்றி பாகிஸ்தான் கேள்வி கிளப்பியதாக பாகிஸ்தான் தூதுகோஷ்டி இங்கு அறிவித்துள்ளது. ஆனால், பிரச்சினை மாநாட்டில் எழுப்பப்படுவதை இந்தியா ஆட்சேபித்ததாகவும் தூதுகோஷ்டி தெரிவித்தது. (பி.டி.ஐ)

சதிவழக்கு

## தகவல் புத்தகத்திலிருந்து கேள்விகேட்கும் உரிமை

### தீர்ப்பளிக்கும்படி நீதவானிடம் வழக்கறிஞர் கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

சதிவழக்கு விசாரணை இன்று நடைபெற்றபோது எதிரிகள் தரப்புக்கான வாதங்களைத் தொகுத்துக் கூறவிரும்புவதாக ஞானசிகதேரோவின் வழக்கறிஞர் திரு. கே. சி. டி. சில்வா கூறினார்.

நீதவான் இரண்டு பிரச்னைகளையிட்டுத் தீர்ப்பு வழங்க வேண்டும். முதலாவது, தகவல் புத்தகத்தைத் தருவித்து, அப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களிலிருந்து சாட்சியங்களைக் கேள்வி கேட்பதற்கு நீதவானுக்கு உரிமை இருக்கின்றதா என்பது. இரண்டாவது சாட்சிச் சட்டத்தின் 169-ம் பிரிவுகளைப் பயன்படுத்தி, சாட்சி ஒருவரின் ஞாபகசக்தியைப் புதுப்பித்தல்.

இரண்டாவது கேள்வியைப் பொறுத்தவரை, பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களை, அவ் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தவர்களுடைய ஞாபகசக்தியைப் புதுப்பிக்க பயன்படுத்துவது பற்றித் தமக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை என்று திரு. கே. ஸி. டி. சில்வா கூறினார். ஆனால், அவற்றை வாக்குமூலமளித்தவரைக் கேள்வி கேட்பதற்காகப் பயன்படுத்த முடியாது.

நீதவான் எதிரிதரப்பு வழக்கறிஞருக்கெதிராகத் தீர்மானித்தால், இவ் விஷயத்தை எதிரிதரப்பு வழக்கறிஞர் சுப்பிரீம்கோர்ட்டில் கிளப்புவார் என்று திரு. கே. ஸி. டி' சில்வா தெரிவித்தார். கோட்டாருக்கு இதனை அறிவித்தல் தமது கடமைஎன்றார் அவர். ஏனெனில், எதிரிகளுக்கு எதிராக நீதவான் சாட்சியங்களைப் பதிந்தாரானால், எதிர்கால சுப்ரீம் கோர்ட் விசாரணை ஒன்றிலும் இதே சாட்சியங்கள் பயன்படுத்தப்படலாம். அத்துடன், சட்டவிரோதமாகப் பதிவுசெய்யப்படும் சாட்சியங்களும், அது பத்திரிகைகளில் வெளியிடப்படுவதும் எதிரிகளுக்கெதிரான பாரபட்சத்தை உண்டாக்க ஏதுவாகும்,

முடிக்குரிய வழக்கறிஞர், திரு. யூ. எல். ஏ. புல்லேநாயகம் முடிக்குரிய தரப்புக்கான வாதத்தைத் தொகுத்துக் கூறிய பின், நீதவான் தீர்ப்பை ஒத்திவைத்தார்.

## முதலில் அட்டோர்ணிஜெனரல் நடவடிக்கை எடுக்கவேண்டும்

### பொலிஸ் அதிகாரிகளை கைதுசெய்ய உத்தரவிட நீதவான் மறுப்பு

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி வழக்கில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்வதற்கான 'வாரண்ட்' பிறப்பிக்கும்படி இன்று கொழும்பு கோட்டை நீதவான் வின்சன்ட்சுவர்ணதிபதி முன்னிலையில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. ஸி. டி. சொய்ஸா கேட்டுக் கொண்டார்.

தொடம்பே முதலாளி தாக்கப்பட்டதாகக்கூறப்படும் அறையில் இருந்த அதிகாரிகள்மீது கணிசமான அளவு சந்தேகம் இருப்பதாகவும் ஆனால் அந்த அதிகாரிகள் யார் யார் என்பது தமக்குத்தெரியாது என்றும் நீதவான்கூறினார். நீதவான் வழக்கைப்பதிவு செய்து விசாரணை ஆரம்பிக்க வேண்டுமென்று முடிக்குரிய வழக்கறிஞர் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கையில் அரசாங்க தரப்பில் வழக்கை தாக்கல் செய்யும்படி வழக்கறிஞரிடம் நீதவான் கூறினார். எதிரிகளின்பெயர்களைக் கூறி கைது செய்ய உத்தரவுபிறப்பிக்கும்படி வழக்கறிஞர் வற்புறுத்தினார்.

தாம் அளித்துள்ள தீர்ப்பின் மீது அட்டோர்னி ஜெனரல் நடவடிக்கைமேற்கொள்ளவேண்டுமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும், பொலிஸ் அதிகாரிகளைக் கைதுசெய்யதாம் உத்தரவிட என்னுமல் இல்லை ஆனால் முதலில் அட்டோர்னி ஜெனரல் நடவடிக்கை எடுப்பதை எதிர்பார்ப்பதாகவும் நீதவான் கூறினார்.

இந்தவிஷயம் பொலிஸ் இலாகாவினாலும் அட்டோர்னிஜெனரல் இலாகாவினாலும் புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வழக்கு தாக்கல்செய்யப்பட வேண்டிய ஒன்றுமென்று குறிப்பிட்ட நீதவான், தற்கொலை என்பதை கொலை என்று மாற்றி தீர்ப்பை அட்டோர்னி ஜெனரல் இலாகாவுக்கு அனுப்புவதாக கூறினார்.

## குருணாகலுக்கு திரும்ப உத்தரவு

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி மரணம் சம்பந்தமான புலன் விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்டிருந்த குருணாகல் பொலிஸ் சுப்ரீண்டன் திரு. எலியன் பெர்னாண்டோவை மீண்டும் குருணாகலைக்குத் திரும்ப உத்தரவிடப்பட்டுள்ளன. இந்த விஷயம் குறித்து பிரதிநிதிகள் சபை விவாதித்து முடிவு செய்யும் வரை புலன் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## மீண்டும் 'யமனுக்கு' தவணை!

கொழும்பு, வெள்ளி

மங்கள எலியா கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்குக் கயிற்றை எதிர்பார்த்திருக்கும் ஆர். எம். பொடிஅப்புகாமி, மீண்டும் மரணதண்டனை நிறைவேற்றும் தினம் ஒத்திவைக்கப்பட்டதால் யமனுக்கு மற்றுமொரு முறை டிமிக்கி கொடுத்திருக்கிறார். பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டிருப்பதால் மரண தண்டனை நிறைவேற்றும் தினம் அடுத்த மாதம் 15-ம் திகதி என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி மரணம் சம்பந்தமான கோட்டை நீதவான் தீர்ப்பின் அறிக்கையை அட்டோர்னி ஜெனரல் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அட்டோர்னி ஜெனரல் மேல் விசாரணை பற்றி முடிவு செய்வார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org